கடைகாரனிடம் சரணடைந்தது போலும், பூஜிப்பதற்காக கோவிலுக்கு சென்ற பொழுது அது இடிந்து மேலே விழுந்து இறந்துவிட்டது போல் ஆகிவிட்டது. எனக்கு ஆசையளித்து நீங்கள் ஏன் என் மகனை காப்பாற்ற மாட்டீர்கள்?" என்று இரவு முழுவதும் அழுது கொண்டே இருந்தாள்.

மறுநாள் காலையில் ஊரிலுள்ள பிராமணர்கள் வந்து "நீ இப்படி அழுவதால் என்ன பயன். உன் மூர்க்கத்தை விட்டுவிட்டு குழந்தையின் சடலத்தை எரிப்பதற்கு எங்களிடம் கொடுத்துவிடு" என்று கேட்டார்கள். அதற்கு அவள் குழந்தையுடன் நானும் அக்னி பிரவேசம் செய்கிறேன் என்று சொல்லி குழந்தையை தன் மார்பில் அனைத்து கொண்டு விட்டாள். அங்கு கூடியிருந்தவர்கள் இந்த விபரீதத்தை கண்டு வியப்படைந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் மத்தியானம் ஆகிவிட்டது. அந்த நேரத்தில் அங்கு ஒரு பிரம்மச்சாரி வேடத்தில் ஸ்ரீகுருவாகிய ஸ்ரீநரசிம்ம சரசுவதி அவர்கள் வந்து அவளை தேற்றி தத்துவ ஞானத்தை போதிக்கலானார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுரதேவதத்த!*







## அத்தியாயம் 21

"அம்மா ஏன் மூடத்தனமாக இப்படி அழுதுகொண்டு இருக்கிறாய். இந்த சம்சாரம் ஒரு நொடியானது. பிறப்பு இறப்பு சுழலில் (வட்டத்தில்) நமது உடல் பிறந்து இறந்து விடுகிறது. செய்த வினையின் படி பஞ்ச பூதங்களின் சேர்க்கையினால் உடல் ஏற்பட்டு வினை (கர்மா) தீர்ந்த உடனே பஞ்ச பூதங்கள் சென்று விடுவதனால் உடல் நாசமாகிறது. மாயாவின் மோகத்தினால் நிலை அற்ற மனித உருவங்களை மகனென்றும் மனைவி என்றும் புருஷன் என்றும் பல உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் 'சத்துவ' குணத்தினால் தெய்வத் தன்மையும் 'ரஜோ' குணத்தினால் மனிதத் தன்மையும் 'தமோ' குணத்தினால் அரக்கத் தன்மையும் பெறுகிறார்கள். செய்த வினையின் படி கர்மத்தை அனுபவிக்கிறார்கள். ஆகையால் ஞானிகள் பிறப்பினால் சந்தோஷத்தையும் இறப்பினால் துக்கத்தையும் பெறுவதில்லை. கோடி கல்பங்கள் ஜீவிக்கும் தேவர்களே செய்த கர்மாவை அனுபவிக்கிறார்கள். மனிதர்களாகிய நம்மை பற்றி சொல்ல வேண்டுமா?

ஜீவத்திற்கு உடல் புகலிடம். உயர் (ஜீவி) தேகத்தின் மேல் ஆதாரபடும். தேகம் காலத்தின் ஆதீனத்தில் இருக்கும். காலமோ கர்மத்தின் படி நடக்கும். கர்மத்தின் படி ஒவ்வொரு உடலும் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என்ற நிலைகள் பெறுகின்றன. இப்படிப்பட்ட உடல் நிரந்தரமானது என்று எண்ணக்கூடாது. பிறப்புக்கு முன்பும், இறப்புக்கு பின்பும் இல்லாமல், வாழும் சில நாட்கள் இருக்கும் இந்த உடல் நீர்குமிழ் போன்றானது என்று நினைக்க வேண்டும். கர்மத்தின் படி சிலர் சிறு வயதிலும் சிலர் பருவத்திலும் சிலர் முதியோரானதும் இறந்துவிடுகிறார்கள். ஆண், பெண் சேர்க்கையினால் உருவான இந்த உடல் மேல்தோற்றத்திற்கு அழகாக இருந்தாலும், உள்ளே மலம், மூத்திரம், இரத்தம், மாமிசம் போன்றவற்றினால் நிரம்பி இருக்கிறது.

கனவில் தோன்றிய பொருள் விழித்தபிறகு காணவில்லை என்று யாராவது வேதனைப் படுவார்களா? இதற்கு முன்பு நீ எத்தனை பிறவிகள் எடுத்திருக்கிறாய். அவைகளில் நீ யாருக்கு தாயாகவும், மகளாகவும், மனைவியாகவும் இருந்தாயென்று தெரியுமா? இவன் இறந்த பிறகு யார் வயிற்றில் பிறப்பான் என்று நீ அறிவாயா? ஆகையால் நீ இவன் மேல் வைத்திருக்கும் பாசத்தைவிட்டு உயிரில்லாத இந்த உடலை ஈமசடங்குகளை செய்வதற்கு அவர்களிடம் ஒப்படைத்துவிடு" என்று பிரம்மச்சாரி கூறினார்.

இதைக் கேட்ட அவள் "சுவாமி நீங்கள் கருணையுடன் உபதேசித்த தத்துவம் தர்மமானது. ஆனால் அது என் மனதில் நிலைக்கவில்லை. நமது கர்மத்தின் படி பிறப்பு, இறப்புகள் நடக்குமென்றால் இனி கடவுளை பூஜிக்க வேண்டிய அவசியமே இல்லையே. துன்பங்கள் வரும்பொழுது கடவுளை பூஜித்து அவற்றிலிருந்து காப்பாற்றபடுவதை நாம் பார்க்கின்றோமல்லவா, அப்படியே நானும் என் பாவங்களை போக்கி கொள்ள சத்குருவாகிய ஸ்ரீ நரசிம்ம சரசுவதி சுவாமிகளிடம் தஞ்சம் புகுந்தேன். அவர் எனக்கு நீண்ட ஆயுளுடைய மகன் பிறப்பான் என்று வரம் கொடுத்தார். ஆனால் அது பொய்யாகிவிட்டது. இப்படியான அவர் புகழ் எல்லோர்க்கும் தெரிவதற்காகவாவது நான் என் உடலை மாய்த்துக்கொள்வேன்" என்றாள். அவளின் திடமான பக்திக்கு உவந்து அவளிடம் "அம்மா நீ இப்படி இந்த இடத்தில் வேதனை படுவதினால் என்ன லாபம். உனக்கு வரம் கொடுத்த பஞ்சநதி சங்கமத்தில் அத்தி மரத்தடியிலிருக்கும் சுவாமிகளின் பாதங்களிடம் இந்த உடலை கொண்டு போய் வையுங்கள்" என்று கூறி அந்த பிரம்மச்சாரி சென்றுவிட்டார். அவர் கூறியதைப் போல் குழந்தையை தன் மடியில் கட்டிக் கொண்டு கணவனுடன் அத்தி மரத்தடிக்கு சென்று குழந்தையை அங்கு வைத்து வேதனையுடன் தன் தலையை பாதுகைகளின் மேல் அடித்துக் கொண்டிருக்கிறாள். அதனால் இரத்தம் வடிந்து பாதுகைகள் நனைந்து விட்டன. இதற்குள் அங்கு ஊரில்



உள்ளவர்களெல்லாம் வந்து "அம்மா நீங்கள் இப்படி அழுது தலையை அடித்துக் கொள்வதினால் என்ன பிரயோசனம்? இறந்து விட்ட பிள்ளை பிழைப்பானா? பொழுது சாய்கிறது. இந்த இடத்தில் இரவில் யாரும் இருக்க மாட்டார்கள். ஆகையால் குழந்தையை ஈமசடங்குகள் செய்ய எங்களிடம் கொடுங்களென்று" பலவிதமாக கேட்டார்கள். ஆனால் அவள் அவர்களின் பேச்சை கேட்காமல் பிள்ளையை கட்டி அனைத்துக் கொண்டு அழுத வண்ணம் இருந்தாள். அப்பொழுது ஊர்காரர்கள் இவள் நம்பேச்சை கேட்க மாட்டாள். நாம் இனிமேல் இங்கு இருக்க முடியாது. வீட்டிற்கு சென்று நாளை காலையில் வருவோம். அந்த நேரத்திற்கு பிணம் துர்நாற்றம் வந்துவிடும். அப்பொழுதாவது நம்மிடம் கொடுக்கமாட்டாளா? என்று பேசிக் கொண்டு வீடுகளுக்கு சென்றுவிட்டார்கள். அவளுக்கு இரண்டு நாட்களாக தூக்கமில்லாததும், மிக சோர்வடைந்ததாலும் தூக்கம் வந்துவிட்டது. அவள் கனவில் ஜடைகளுடன் (ஜடதாரி) உடலில் விபூதி தரித்து புலி தோல் ருத்ராட்சங்களுடன் கைகளில் திரிசூலம் தண்டத்துடன் சுவாமி தரிசனம் தந்து "அம்மா ஏன் இப்படி என்னை திட்டுகிறாய். உன் பிள்ளையை காப்பாற்றுவதற்காகவே வந்திருக்கிறேன்" என்று சொல்லி சவத்திற்கு விபூதி பூசி, மூக்கில் காற்றை ஊதி அம்மா உன் பிள்ளைக்கு உயிர் தந்துவிட்டேன். இனி அழவேண்டாம் என்று சொல்லி மறைந்துவிட்டார். அவள் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு அந்த கனவை நினைத்து இது என்ன அதிசயம். இறந்தவன் பிழைப்பது சாத்தியமா? நான் என்ன நினைத்துக் கொண்டு தூங்கினேனோ அதுதான் கனவாக வந்தது. நாங்கள் செய்த பாவம் இப்படியிருக்க, சுவாமியை ஏசினேன் (திட்டினேன்) என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டிருக்கையில் பிள்ளையின் சவத்தில் சிறு அசைவு தென்பட்டது. இதைப்பார்த்த அவள் இது என்ன ஏதாவது பூதம் வந்துவிட்டதோ என்று பயத்துடன் பிள்ளையை பார்க்கையில் அவன் மெல்ல எழுந்து அம்மா எனக்கு பசியாக இருக்கிறது என்று சொல்லி அம்மாவின் அருகில் வந்தான்.

அவளுக்கு அற்புதமாக மார்பகங்களில் பால் சுரப்பின. அவள் குழந்தைக்கு பால் கொடுத்து உறங்கிக் கொண்டிருந்த கணவனை எழுப்பி அங்கு நடந்ததை எல்லாம் கூறினாள். தம்பதிகள் இருவரும் குழந்தையுடன் அத்திமரத்தை வலம் வந்து, ஸாஸ்டாங்க நமஸ்காரம் செய்து சுவாமியை இப்படி துதித்தார்கள்.

"ஓ குருமூர்த்தி, உங்களுக்கு ஜயம் உண்டாகுக. நீங்கள் பக்தவத்சலனும், உலகை காப்பாற்றுமவரும் ஆவாய். மும்மூர்த்திகளின் அவதாரம் நீங்கள். உங்களை போற்ற யாராலும் முடியாது. எங்கள் தவறுகளை மன்னித்து காப்பாற்றுங்கள்" என்று வேண்டி குழந்தையுடன் சங்கமத்தில் நீராடி, அந்த நீரினால் பாதுகைகளையும் அத்திமரத்தையும் அபிஷேகம் செய்து பூஜித்தார்கள். இதற்குள் பொழுது விடிந்தது. சவத்தை எரிப்பதற்காக ஊரிலிருந்து வந்த பிராமணர்கள் குழந்தை பிழைத்திருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டு ஸ்ரீகுரு மகிமையை போற்றினார்கள். பிறகு அந்த குழந்தை நன்றாக படித்து நீண்ட ஆயுளுடன் சகல பாக்கியங்களுடன் வாழ்ந்தான்.

நாமதாரகா, ஸ்ரீகுருவின் மகிமையை பார்த்தாயல்லவா! ஸ்ரீகுரு அந்த அத்திமரத்தடியில் எப்பொழுதும் இருந்துகொண்டு தன்னிடம் தஞ்சம் அடைந்தவர்களின் துன்பங்களை துடைத்து அவர்களை காப்பாற்றுவார். இதில் எந்தவித ஐயமும் இல்லை. ஆதலால் அந்த அத்திமரம் உண்மையாக கல்பவிருட்சம்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 22

நாமதாரகன் சித்தமுனி பாதங்களை வணங்கி கைகளை கூப்பி "சுவாமி குருசரித்திரத்தை கேட்பதனால் என்னுள் குருபக்தி பெருகிக் கொண்டிருக்கிறது. ஆகையால் இதற்கு பின்பு என்ன நடந்தது என்று கூறுங்கள்" என வேண்டினான்,

"நாமதாரகா உனக்கு குருவின் கிருபை கிடைத்தது. குருவின் கதையை சொல்வதினால் எனக்கு புண்ணியம் கிடைத்தது.

ஸ்ரீ நரசிம்ம சரசுவதி அவர்கள் கந்தர்வ நகரத்தின் சங்கமத்தில் மறைமுகமாக இருந்தார். அங்கு பீமா, அமரஜ என்ற இரு நதிகள் சங்கமமாகி வடக்கு திசையாக செல்கின்றன. இரண்டு நதிகள் சங்கமமாகின்றதால் அது பெருந் தலமாகிறது. அங்கு ஒரு அத்திமரம் இருக்கின்றது. ஆகையால் அது பிரயாகைக்கு சமமானது. அங்கே பெரும் மகிமையுடைய எட்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. எல்லா தீர்த்தங்களும் சுவாமியின் பாதங்களில் இருந்தாலும் மறைந்திருந்த அந்த இடத்தின் மகிமையை எல்லோர்க்கும் தெரியப்படுத்தவே சுவாமி அங்கு வந்து இருக்கலானார். அவர் சங்கமம் அருகிலுள்ள காட்டில் வசித்து, அருகிலுள்ள கந்தர்வபுரத்திற்கு பிச்சைக்கு போய்க்கொண்டிருந்தார். அந்த கிராமத்தில் வேத பண்டிதர்களான நூறு பிராமணக் குடும்பங்கள் இருந்தன. அவர்களில் ஏழை பிராமணர் ஒருவர் இருந்தார். அவர்களுக்கு வயதான மலட்டு எருமை இருந்தது. அதை மண், மணல் முதலியவை எடுத்து செல்லும் வண்டிக்காக வாடகைக்கு கூட்டிச் செல்வார்கள். அந்த பிராமணர் அந்த எருமையினால் வரும் வாடகை பணத்தாலும் பிச்சை செய்தும் வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஸ்ரீநரசிம்ம சரசுவதி சுவாமிகள் அதிகமாக இந்த ஏழை பிராமணர் வீட்டிற்கு பிச்சைக்குப் போவார். இதைப் பார்த்த செல்வந்தர்களான பிராமணர்கள் நாம் இத்தனை பேர் இருக்கும்

பொழுது ஏன் சுவாமி அவர்கள் அந்த ஏழை வீட்டிற்கு பிச்சைக்காக போகிறார்? அங்கே அவருக்கு என்ன கிடைக்க போகிறது என்று விமர்சிக்கலானார்கள். குருமார்கள் தன்னை பக்தியுடன் சேவிப்பவர்களின் நலனை கருதி அவர்களின் வீடுகளுக்கு பிச்சைக்காகச் செல்வார்கள். பக்தி இல்லாதவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும் அங்கு செல்லமாட்டார்கள். ஸ்ரீகிருஷ்ணபகவான் ஏழை விதுரர் வீட்டிற்கு விருந்தாளியாகச் சென்றாரே தவிர அவரை அழைத்த துரியோதனனின் மாளிகைக்கு செல்லவில்லையே. குரு அவர்கள் நினைத்தால் ஒரு நொடியில் ஏழையை பணக்காரராக மாற்றிவிடுவார். பிரம்மா எழுதியதைக்கூட மாற்ற வல்லமை வாய்ந்தவர் குரு மட்டுமே.

அதிக வெப்பகாலமான வைகாசி மாத மத்தியான வேளையில் ஸ்ரீகுரு அவர்கள் அந்த ஏழைப் பிராமணர் வீட்டிற்கு சென்று பிச்சை கேட்டார். சுவாமியைப் பார்த்த அந்த பெண்மணி "சுவாமி என் கணவர் ஊருக்குள் பிச்சைக்காக சென்றிருக்கிறார். அவர் வரும் வரை இந்த ஆசனத்தில் சற்று உட்காருங்கள்" என்று பணிவுடன் வேண்டி ஒரு மனையை போட்டாள். அவர் அந்த மனையில் உட்கார்ந்து "அம்மா உன் கணவர் வரும் வரை என்னால் காத்திருக்க முடியாது. இதோ இங்கு கட்டி வைத்திருக்கும் எருமையிடமிருந்து பாலை கறந்து கொடுத்தால் அதை குடித்துவிட்டு செல்கிறேன்" என்றார். அப்பொழுது அவள் "சுவாமி இந்த எருமை பிறந்ததிலிருந்தே மலடாக இருந்தது. இதை நாங்கள் வண்டிகளுக்கு கட்டி செல்ல வாடகைக்கு கொடுத்து அதிலிருந்து வரும் பணத்தில் வாழ்கிறோம். இப்பொழுது அதற்கும் வயதாகி பல்லும் உதிர்ந்து விட்டது. இன்று அதை யாரும் வாடகைக்கு கூட்டி செல்லவில்லை" என்று கூறினாள்.

அதற்கு சுவாமி அவர்கள் "ஏன் நீங்கள் வீணாக பேசுகிறீர்கள். அந்த எருமை பால் கொடுக்கும் கறந்து பாருங்கள்" என்றார். அவர் நேரில் பார்த்தால் உண்மை தெரியும் என்று நினைத்து அந்த பெண்மணி ஒரு பாத்திரத்தை எடுத்துவந்து எருமையிடம் பால்



கறக்கலானாள். ஆச்சரியம், அதிசயம் அந்த மலட்டு எருமை இரண்டு பாத்திரங்கள் நிறைய பாலைக் கொடுத்தது. இதைப் பார்த்த அந்த இல்லத்தரசி வந்தவர் சாட்சாத் அந்த மகேசனே தவிர வேறுயாருமில்லை என்று நினைத்து சுவாமியை வணங்கி பாலை காய்ச்சி சுவாமிக்கு கொடுத்தாள். பாலை குடித்துவிட்டு சந்தோஷமடைந்து "அம்மா நீங்கள் எல்லா செல்வங்களையும் பெற்று பிள்ளை பேரர்களுடன் சுகமாக வாழ்வீர்கள்" என்று ஆசிர்வதித்து சங்கமத்திற்கு சென்றுவிட்டார். பிறகு வீட்டிற்கு திரும்பிய கணவரிடம் இங்கு நடந்ததையெல்லாம் சொன்னாள். அதைக் கேட்ட அவர் மனைவியுடன் சங்கமத்தில் அத்தி மரத்தினடியில் அமர்ந்திருந்த குருமூர்த்தியிடம் சென்று வணங்கி பூஜை செய்தார்கள். பிறகு அவர்கள் சுவாமி அருளினால் எல்லா செல்வங்களையும் பெற்று சுகமாக வாழ்ந்தார்கள். ஆகையால் நாமதாரகா குருவின் அருளை பெற்றவர்கள் எப்பொழுதும் சுகமாக வாழ்வார்கள்" என்று சித்தமுனி கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 23

நாமதாரகா எப்பொழுதும் போல் அந்த எருமையை வாடகைக்கு கூட்டிச் செல்ல ஒருவன் வந்தான். அவனைப் பார்த்து "அய்யா எங்கள் எருமையை இனிமேல் வாடகைக்கு கொடுக்க மாட்டோம். அது பாலை கறக்கிறது. இதோ பாருங்கள் அது கறந்த இரண்டு பாத்திரங்கள் நிறைந்த பால்" என்று சொன்னார். அவன் அந்த கிராமத்திலிருப்பவர்களுக்கு இந்த விந்தையை கூறினான். அதைக் கேட்ட அவர்கள் எருமை எப்படி கர்ப்பந்தறிக்காமல், கன்று ஈன்றாமல் பாலை கொடுக்கிறது என்று ஆச்சரியப்பட்டார்கள். இது அந்த ஊரின் மன்னனுக்கு தெரிந்து அந்த விந்தை எப்படி நடந்ததென அறிய அந்த ஏழை பிராமணர் வீட்டிற்கு வந்து எப்படி மலட்டு எருமை பாலை கொடுத்தது என்று கேட்டார். அதற்கு அவர் "ராஜா இது சங்கமம் அருகிலுள்ள அத்திமரத்தினடியில் இருக்கும் ஒரு யதீச்வரரின் மகிமையால் நடந்தது" என்று அன்று நடந்ததை சொன்னார். உடனே மன்னர் தன் குடும்பத்தினர் அனைவரையும் அழைத்துக் கொண்டு சங்கமத்திற்கு சென்று சுவாமியின் பாதங்களை வணங்கி அவரை இப்படி போற்றி பாடினார்.

"ஹே! ஜகத்குரு உங்களுக்கு ஜயம் உண்டாகுக. மாயையினால் குருடனாகிய எனக்கு மும்மூர்த்திகளின் அவதாரமான உங்கள் மகிமை அபாரமானது என்று தெரிந்து கொண்டேன். பரஞ்ஜோதி சொரூபம் நீங்கள்தான். என்னை இந்த இல்லற வாழ்க்கையிலிருந்து காப்பாற்ற வேண்டும். பாமரர்களின் பார்வைக்கு மனிதர்களாக தெரியும் நீங்கள் உலகை உண்டாக்க கூடியவர்கள்" என்று கூறி மீண்டும் ஸ்ரீகுருவின் பாதங்களை வணங்கினான்.

ஸ்ரீநரசிம்ம சரசுவதி சந்தோசமாகி அவரை ஆசிர்வதித்து "மன்னா நாங்கள் முனிவர்கள். காடுகளில் வசிக்கும் சன்னியாசிகள். நீ உன் பரிவாரங்களுடனும் குடும்பத்தினருடனும் இங்கு ஏன்



வந்தீர்கள்" என்று கேட்டார். மன்னர் வணங்கி "சுவாமி நீங்கள் உலகை ஆளக்கூடியவர்கள். பக்தர்களை காப்பாற்றுவதற்காக அவதரித்த நாராயணன் நீரே. இப்படி அவதரித்த நீங்கள் காடுகளில் ஏன் வசிக்க வேண்டும்? என் வேண்டுதலை மன்னித்து நகரத்திற்கு வந்து எங்களை அருள் புரியவேண்டும். உங்களுக்காக நான் அங்கு ஒரு மடத்தை கட்டித் தருகிறேன். அங்கு நீங்கள் இருந்து கொண்டு அனுட்டானங்களை செய்துகொண்டு எங்களை காப்பாற்றுங்கள்" என்று வினயத்துடன் வேண்டினான். அப்பொழுது குருமூர்த்திகள் நான் உலகிற்கு வெளிப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்த உடலினால் ஆக வேண்டிய காரியங்கள் இருக்கின்றன. ஆகையால் இவர்களின் வேண்டுதலை தீர்த்து வைப்பேன் என்று மனதில் எண்ணி "மன்னா உங்கள் பக்திக்கு நான் சந்தோஷமடைந்தேன். நீங்கள் விரும்பிய படியே நான் வருகிறேன்" என்றார். மன்னர் மிக்க சந்தோஷமடைந்து ஸ்ரீகுருவை பல்லக்கில் அமரவைத்து வாத்திய, நடன, பாடல்களுடன் கானகாபுரத்திற்குப் புறப்பட்டார்கள். பல்லக்கு முன்புறம் குதிரைகள், யானைகள், அவர்களுக்கு பின்னால் மன்னரும், கட்டியகாரர்கள் சுவாமியின் புகழை போற்றிக் கொண்டும் பிராமணர்கள் வேதம் படித்துக் கொண்டும் வந்தார்கள். சுவாமி ஊருக்குள் வருவதை தெரிந்த மக்கள் அவரை எதிர்கொண்டு அழைக்க பூஜை பொருட்களுடனும், ஆரத்திகளுடனும் வந்தார்கள்.

கிராமத்தின் மேற்கு திசையில் ஒரு பெரிய அரச மரமும் அதனை சுற்றி மக்கள் இல்லாமல் பாழடைந்த வீடுகளும் இருக்கின்றன. அந்த அரசமரத்தின் மேல் ஒரு பிரம்ம ராட்சசன் இருந்து சுற்றியுள்ள வீடுகளிலிருந்த மனிதர்களையும், அந்தப் பக்கம் வரும் மனிதர்களையும் துன்புறுத்திக் கொண்டிருந்தான். ஆகையால் அங்கே வசிப்பவர்கள் வீடுகளை விட்டுச் சென்றார்கள். ஸ்ரீகுருவின் ஊர்வலம் அரச மரத்தின் அருகில் வருவதை பார்த்த பிரம்மராட்சசன் கீழே இறங்கி வந்து, மற்றவர்களுக்கு தெரியாமல் சுவாமியை வணங்கி "இருளில் இருக்கும் என்னை காப்பாற்றி அருள் புரிய

வேண்டுமென்று" வேண்டினான். சுவாமி அந்த ராட்சசன் தலையில் தன் கையை வைத்து ஆசிர்வதித்தார். உடனே அவனுக்கு மனித உருவம் வந்து சுவாமி பாதங்களை தொட்டு வணங்கினான். சுவாமி "சங்கமத்தில் நீராடினால் முக்தி கிடைக்கும். ஆகையால் நீ சங்கமத்தில் நீராடு" என்று கூறினார். சுவாமி சொன்னது போல் அவன் சங்கமத்தில் நீராடி அந்த உடலை விட்டு முக்தி அடைந்தான். அங்கு கூடியிருந்த அனைவருமே இதைப் பார்த்து ஸ்ரீகுருமூர்த்தி அவர்கள் அந்த ஈசனின் அவதாரமே தவிர வேறு யாருமில்லை என்று நினைத்து சுவாமியை பக்தியுடன் வணங்கினார்கள். மன்னன் சுவாமிக்கு அந்த அரசமரத்தின் அருகில் ஒரு மடத்தை கட்டி கொடுத்து எல்லா வேலைகளிலும் பக்தியுடன் பலவிதமான உபசாரங்களுடன் சுவாமியை பூஜிக்கலானார்கள். நீராடுவதற்கும், அனுட்டானத்திற்கும் சங்கமம் செல்லும் சுவாமியை ராஜமரியாதைகளுடன் பல்லக்கில் ஏற்றிச் செல்வார்கள். மன்னனும் தினமும் வந்து சுவாமியை பக்தியுடன் சேவித்துக் கொண்டு செல்வார். இப்படி இருக்கையில் சுவாமியின் புகழ் சுற்றியிருக்கும் ஊர்களுக்கெல்லாம் பரவிற்று. ஆதலால் அங்கு தினமும் பிராமண அன்னதானங்கள் நடைபெற்று வந்தன.

கந்தர்வ நகரத்தின் அருகில் "குமசி" என்ற கிராமம் இருக்கிறது. அந்த ஊரில் எல்லா வேதங்களை படித்த திரிவிக்ரம பாரதி என்ற யதீசுவரன் இருந்தார். அவர் நித்தமும் நரசிம்மரை மானச (மனதில்) பூஜை செய்து வந்தார். அவர் ஸ்ரீநரசிம்ம சரசுவதியின் மகிமையை தெரிந்து கொண்டு ஒரு சன்னியாசி இப்படி சன்னியாச தர்மத்திற்கு விரோதமாக ஆடம்பரமான வைபவங்களை அனுபவிக்கலாமா என்று பலபேருடன் நிந்திக்கலானார். இப்படி சுவாமியை நிந்திப்பது மற்றவர்கள் மூலம் ஸ்ரீகுருவிற்கு தெரியவந்தது.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 24

சித்தமுனி நாமதாரகனிடம், குருவை எப்பொழுதும் போல் தரிசிக்க வந்த மன்னரிடம் "மன்னா அருகிலுள்ள குமசி கிராமத்தில் இருக்கும் திரிவிக்ரம பாரதி எங்களை நிந்தனை செய்கிறார். ஆகையால் நாம் இன்று அவரை பார்க்கச் செல்ல வேண்டும்" என்று கூறினார். உடனே மன்னர் சுவாமி குமசி செல்ல ஓர் அழகான பல்லக்கை தயார்படுத்தி அதில் சுவாமியை அமர வைத்து முழு ராஜமரியாதையுடன் புறப்பட்டார்கள்.

குமசி கிராமத்தில் திரிவிக்ரம பாரதி என்றும் போல் தன் இஷ்ட தெய்வமான நரசிம்மரை மானசீகமாக பூஜை செய்ய அமர்ந்தார். ஆனால் அவருக்கு அன்று தினமும் போல் நரசிம்மர் மனதில் தோன்றவில்லை. எவ்வளவு முயன்றும் அவருக்கு நரசிம்ம தரிசனம் கிடைக்கவில்லை. அப்பொழுது வேதனையுடன் "சுவாமி ஏனின்று நீங்கள் என் மனதில் தோன்றவில்லை? இத்தனை நாள் நான் செய்த பூஜையெல்லாம் இன்றுடன் வீணாயிற்றே. இன்று நான் செய்த பாவம் என்ன? என்னிடம் கருணை காட்டுங்கள்" என்று வேதனையுடன் வேண்டினான். அப்பொழுது அவருக்கு ஓர் யதீசுவரன் அரச மரியாதைகளுடன் குதிரை, யானை பரிவாரங்களுடன் வருவது மனதில் தென்பட்டது. உடனே பூஜையிலிருந்து எழுந்து வெளியே வந்து பார்க்கையில் அவர் மனதில் தென்பட்ட யதீசுவரன் சகல பரிவாரங்களுடன் வருவது பார்த்து வியப்படைந்தார். உடனே அந்த ஊர்வலத்தின் அருகில் சென்று சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து பார்க்கையில் அங்கே இருக்கும் அத்தனை பேரும் யதிகளாகவே தென்பட்டார்கள். வியப்புடன் "சுவாமி இவர்களில் நீங்கள் யார் என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். நான் வணங்கும் நரசிம்மரும் நீங்களும் ஒருவரே என்று தெரியாமல் உங்களை நிந்தித்தேன். உங்களின் நிஜ ரூபத்தை நான் காணச் செய்யுங்கள். இத்தனை நாள் நான் செய்த பூஜைக்கு பயனாக

இன்று உங்களை காண நேரிட்டது" என்று தீனமாக மன்றாடினார். இதைக் கேட்ட பக்தவச்சலனான சுவாமி தன் நிஜரூபத்தைக் காண்பித்தார். அப்பொழுது திரிவிக்ரமருக்கு யதிகளெல்லாம் மறைந்து அரசரும், பரிவாரங்களும், குதிரைகள், யானைகள், பள்ளக்கில் அமர்ந்திருக்கும் ஸ்ரீகுருவும் தெரியவந்தார்கள். ஸ்ரீகுரு அவரிடம் "நீங்கள் எங்களை டாம்பீகன் என்று நிந்தித்தீர்கள். அது ஏன் என்று தெரிந்துக் கொள்ளத்தான் இங்கு வந்தேன். நரசிம்மர் பக்தனான நீங்கள் எங்களை எந்த காரணத்தினால் டாம்பீகன் என்று கூறினீர்கள். நீங்கள் பூஜிக்கும் நரஹரியின் அனுகிரகத்துடன் எங்களை பற்றிய உங்கள் சந்தேகங்களை விவரியுங்கள்" என்றார்.

குருவின் கேள்விகளை கேட்ட திரிவிக்ரமர் "சுவாமி மூடனாய் மாயையில் உங்களை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. கண்களிலிருந்தும் கதிரவனைக் காணமுடியாமலிருக்கும் ஆந்தையைப் போல் உங்களின் மகிமையை தெரிந்து கொள்ள முடியவில்லை. என்னை மன்னியுங்கள். விதுரர் வீட்டுக்கு கிருஷ்ணன் நேராக சென்றதுபோல் என்னிடம் நீங்கள் வந்தீர்கள். அஞ்ஞானத்தினால் சம்சாரமென்ற கடலில் மூழ்கி இருக்கும் என்னை ஞானமென்ற ஓடத்தில் உட்காரவைத்து உங்கள் கிருபை என்ற காற்றினால் இந்த சம்சார கடலின் கரைக்கு சேர்த்துவிடுங்கள். எவனொருவன் உங்கள் கிருபையை பெற்றுவிடுவானோ அவனின் முன் பாவங்கள் அகன்றுவிடும். பாரதத்தில் அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணர் விஸ்வரூப தரிசனம் தந்தது போல் இன்று எனக்கு உங்களின் விஸ்வரூப தரிசனம் தந்தீர்கள். பக்தவத்சலா உங்கள் மகிமை எண்ணற்றது. உங்கள் தரிசனத்தினால் நான் தன்யனானேன். நீங்கள் தான் நான் உபாசிக்கும் ஸ்ரீநரசிம்மர். இத்தனை நாள் நான் செய்த உபாசனையினால் உங்கள் தரிசனம் எனக்கு கிடைத்தது" என்று பலவிதமாக அவரை துதித்தார். ஸ்ரீகுருவும் அவரின் பக்திக்கு மனமுவந்து "திரிவிக்ரமா உன் பக்திக்கு சந்தோஷமடைந்தேன். நீ நரசிம்மரை என்றும்போல் உபாசனை



செய். அது எங்களை உபாசனை செய்ததுபோல் ஆகும். உங்களுக்கு மறுபிறவி கிடையாது. இந்த பிறவியிலேயே முக்தி கிடைத்துவிடும் என்று ஆசிர்வதித்து நீங்கள் இந்த கிராமத்திலேயே இருங்கள்" என்று கூறி, அரசரிடமும் பரிவாரங்களிடமும் "எங்களுக்கு அனுட்டானத்திற்கு நேரமாகிவிட்டது நாங்கள் முதலில் சென்று விடுவோம் நீங்கள் பிறகு வாருங்கள்" என்று கூறி மனோ வேகத்தில் சங்கமத்தை அடைந்து அனுட்டானம் முடித்து கந்தர்வபுரத்தை சென்றடைந்தார்கள்.

நாமதாரகா ஸ்ரீகுருவின் மகிமைகளை போற்ற யாரால் முடியும்? அப்படியான ஸ்ரீகுருவை சாதாரண மனிதனாக நினைப்பவன் ஏழு பிறவிகள் நரகமனுபவிப்பான். ஸ்ரீகுருவே மும்மூர்த்திகளின் அவதாரமென வேதங்கள் கூறுகின்றன. ஆகையால் ஸ்ரீகுருவின் பாதங்களை சரணடைபவர்கள் இங்கும் மேல்உலகத்திலும் எல்லா சுகங்களும் பெறுவார்கள். இந்த குரு சரித்திரம் என்ற தண்ணீர் பந்தல் நமக்கு கிடைத்தது. இதை பருகியவர்கள் துன்பங்கள் நீங்கி சுகமாக வாழ்வார்கள்" என்று சித்தமுனி கூறினார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 25

இதன் பின்பு நடந்த ஸ்ரீகுருவின் லீலைகளை விவரியுங்கள் என்று நாமதாரகன் வேண்ட சித்தமுனி "அய்யா முன்பு ஒரு காலத்தில் வைடூர்ய நகரை ஒரு முகம்மதீய மன்னர் ஆண்டு கொண்டிருந்தார். அவர் இந்து மத எதிரி. மிக கொடூரமானவன். தன் ராஜ்யத்திலிருக்கும் வேதம், வேதாந்தம் தெரிந்தவர்கள் எங்களிடம் வந்து உங்கள் வேதங்கள், வேதாந்தங்களை அர்த்தத்துடன் சொன்னால் உங்களுக்கு வேண்டிய பணம் கொடுப்பேன் என்று கூறி வந்தான். விவேகமுள்ள பண்டிதர்கள் எங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று தப்பித்துக் கொண்டார்கள். ஆனால் பண ஆசையுள்ள சிலர் அவரிடம் வேதங்களை அர்த்தத்துடன் சொல்லலானார்கள். அவர்கள் யாகங்களைப் பற்றி சொல்ல, அந்த மன்னர் நீங்கள் யாகங்கள் செய்யும் பொழுது ஜந்துவதை செய்கிறீர்கள். ஆனால் எங்களை மட்டும் ஏன் ஜந்துவதை செய்பவர்கள் என்று குறை கூறுகிறீர்கள் என்று கேட்டு அவர்களை பாராட்டி பணமும் கொடுப்பான். சிலருக்கு விருதுகளையும் கொடுப்பான்.

இப்படி இருக்கையில் வேறு நாட்டிலிருந்து இரண்டு பிராமணர்கள் அந்த மன்னரிடம் வந்து "மன்னா நாங்கள் எல்லா சாத்திரங்களிலும், வித்தையிலும் பெரும் பண்டிதர்கள். எங்களை வெல்ல எங்கள் நாட்டில் யாராலும் முடியவில்லை. ஆகையால் பிற நாடுகளில் சாத்திரத்தில் எங்களுடன் வாதாடி வெல்ல முடியுமா என்று பார்க்க வந்திருக்கிறோம். உங்கள் நாட்டில் எங்களுடன் வாதாடும் வித்வான்கள் இருந்தால் வரவழையுங்கள். அவர்களிடம் எங்கள் திறமையை காட்டுவோம்" என்றார்கள். பிற மதத்தை அவமதிக்க ஒரு வாய்ப்பு கிடைத்ததற்கு மன்னர் மிக சந்தோஷமடைந்து உடனே நாட்டிலுள்ள பண்டிதர்களை அரசவைக்கு அழைத்து "இங்கு இரு பண்டிதர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடன் உங்கள் சாத்திரத்தில் வாதிட்டு வெல்பவர்களுக்கு தக்க சன்மானம் அளிக்கப்படும்.



தோற்றுவிட்டால் அவர்களை தண்டிப்பேன்" என்று கூறினார். அதைக் கேட்ட பண்டிதர்கள் இவர்களுடன் இந்த முகம்மதீய மன்னர் முன் வாதிட்டால் நம் சாத்திரங்களை நாமே அவமதித்தது போல் ஆகும் என்று நினைத்து "எங்களால் இவர்களுடன் வாதம் செய்து வெல்ல முடியாது. ஆகையால் இவர்களையே நீங்கள் பாராட்டி கௌரவியுங்கள்" என்று சொன்னார்கள். அந்த இரு பிராமணர்கள் "உங்களால் எங்களுடன் வாதாடமுடியாததால் எங்களுக்கு ஜெயபத்திரங்கள் வழங்குங்கள்" என்று கேட்டு ஜெய பத்திரங்களை வாங்கினார்கள். அப்பொழுது மன்னர் "நான் எப்படி முகம்மதீயர்களுக்கு மன்னனோ நீங்கள் பிராமணர்களுக்கு மன்னர்" என்று அவர்களை பாராட்டி பொன்னும், பணமும், ஆடைகளும் பரிசாக கொடுத்து அவர்களை யானைகள் மேல் ஊர்வலம் செய்து கௌரவித்து, தன் ஆஸ்தான வித்வான்களாக்கினார். அவர்கள் இருவரும் கர்வம் கொண்டு தினமும் அரச சபையில் வேதங்கள் கூறியும் பிராமணர்களை கேலி செய்தும் வந்தார்கள்.

இப்படி இருக்கையில் ஒருநாள் அந்த இரு பிராமணர்கள் 'மன்னா எங்களுடன் வாதாட உங்கள் ராஜ்ஜியத்தில் யாருமே இல்லை. எங்களுக்கு வாதனை செய்யாமல் இருக்க முடியவில்லை. ஆகையால் தெற்கே உள்ள நாடுகளுக்கு சென்று அங்குள்ள வித்வான்களை வாதனையில் ஜெயித்தும், வாதனை செய்ய முடியாதவர்களிடமிருந்து ஜெய பத்திரங்களை பெற்று வருவோம். ஆகையால் எங்களுக்கு அனுமதி கொடுங்கள்" என்று வேண்டினார்கள். மன்னரும் சந்தோஷமடைந்து பிராமணர்களை பராபவிப்பது நன்று என்று கூறி அவர்கள் செல்வதற்கு யானைகள், பரிவாரங்கள் கொடுத்து அனுப்பினார். அவர்கள் ஊர் ஊராக சென்று பண்டிதர்களை வாதத்தில் ஜெயித்தும் ஜெய பத்திரங்களை பெற்றும் சென்று கொண்டே திரிவிக்ரம பாரதி இருக்கும் குமசி கிராமத்திற்கு வந்து அந்த ஊர்காரர்களிடமிருந்து அவர் பெரும் வித்வான் என்றும் எல்லா சாத்திரங்களை படித்தவரென்றும் தெரிந்து கொண்டு அவரிடம்

சென்று "அய்யா நீங்கள் எல்லாம் தெரிந்த வித்வான் என்று ஊர்காரர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் எங்களுடன் வாதமிடுங்கள். முடியவில்லை என்றால் ஜெயபத்திரம் கொடுங்கள்" என்று கேட்டார்கள். அதற்கு திரிவிக்ரமபாரதி அய்யா எனக்கு வேதங்கள் தெரியாது. அப்படி தெரிந்திருந்தால் நானும் உங்களை போல் அரசவையில் இருந்து எல்லா சுகங்களையும் பெற்றிருப்பேனே தவிர இப்படி ஒரு சிற்றூரில் ஏன் பிச்சை செய்து வாழ்வேன்? அதுவுமில்லாமல் என்னைப் போல் பிச்சை செய்யும் ஏழையுடன் வாதிட்டு ஜெயிப்பதினால் உங்களுக்கு என்ன கிடைக்கும்?" என்று பணிவுடன் சொன்னார். இதைக் கேட்ட அவர்கள் மேலும் ஆணவம் பெற்று எங்களை வெல்ல இந்த பூலோகத்தில் யாருமில்லை. ஆகையால் எங்களுக்கு எவ்வளவோ ஜெயபத்திரங்கள் கிடைத்தன. அவற்றை பாருங்கள். உங்களால் வாதாட முடிந்தால் வாதாடுங்கள். இல்லையேல் ஜெயபத்திரம் கொடுங்கள். ஜெயபத்திரம் பெறாமல் சென்றால் எங்களுக்கு அவமானமாகுமென்று" மூர்க்கமாக வாதிட்டார்கள். இதைக் கேட்ட திரிவிக்ரமபாரதி இவர்களுக்கு ஆணவம் தலைக்கேறிற்று. அதுவுமில்லாமல் இவர்கள் பண்டிதர்களையும், வித்வான்களையும் அவமானப்படுத்துகிறார்கள். ஆகையால் இவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்க என் குருவாகிய ஸ்ரீநரசிம்ம சரசுவதியிடம் அழைத்து செல்வேன் என்று நினைத்து "அய்யா என்னை விட சிறந்தவர் என் குருநாதர் கந்தர்வபுரத்தில் இருக்கிறார். அங்கு சென்று அவரிடம் அனுமதி பெற்று நீங்கள் கேட்பது போல் இரண்டில் ஏதாவது ஒன்று செய்வேன்" என்று கூற அவர்கள் சரி என்று சொல்லி திரிவிக்ரமபாரதி முன் நடந்து செல்கையில் அவர்கள் யானைகள் மேல் செல்லலானார்கள். மகான்களிடம் அப்படி செல்வது மிகமிக தவறென்றும் மிக பாவமென்றும் தெரியாமல் இவர்கள் செல்கிறார்கள். அவர்கள் கந்தர்வபுரத்தில் ஸ்ரீகுருவின் மடத்தை சென்றடைந்ததும் திரிவிக்ரம பாரதி ஸ்ரீகுருவை பார்த்து "ஹே பக்தவத்சலா! கருணாமூர்த்தியே! பக்தர்களின் பாவங்களை தீர்க்கும் தெய்வமே" என்று போற்றி குருவின் பாதங்களை தொட்டு வணங்கி



தன்னோடு வந்த அந்த இருவரை பற்றி கூறி "இவர்கள் மதம் பிடித்து ஆணவத்துடன் நான்கு வேதங்களையும் படித்துள்ளோம். வேதங்களில் எங்களுடன் வாதாடி ஜெயித்தவர்கள் எவருமில்லை என்றும், என்னையும் வாதிட வேண்டுமென்றும் இல்லையெனில் ஜெயபத்திரம் கொடுக்க வேண்டுமென்றும் கட்டாயப்படுத்துகிறார்கள். ஆகையால் இவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டுமென்று எண்ணி உங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன். இவர்களிடமிருந்து என்னையும் வேத தர்மத்தையும் காப்பாற்றுங்கள்" என்று வேண்டினார்.

ஸ்ரீகுரு சிரித்துக் கொண்டே "அய்யா உங்களை போன்ற வேதவித்தகர்களுக்கு வாதனை செய்வதினால் என்ன பலன். சக பிராமணர்களை அவமானம் செய்வதினால் உங்களுக்கு என்ன பலன். சன்யாசிகளான எங்களுக்கு வெற்றி, தோல்விகள் சமமே. அப்படியான எங்களை ஜெயிப்பதினால் உங்களுக்கு லாபமென்ன?" என்று கேட்டார். அப்பொழுது அந்த மதம் கொண்ட பிராமணர்கள் "அப்படியானால் திரிவிக்ரமர் ஏன் எங்களை இங்கு அழைத்து வந்தார்? சன்னியாசியான உங்களுக்கு வேதங்களை பற்றி என்ன தெரியும்? ஒன்றுமே தெரியாத நீங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு ஜெயபத்திரங்கள் எழுதி கொடுங்கள்" என்று கர்வத்துடன் பேசினார்கள். இதை கேட்ட ஸ்ரீகுரு "அய்யா, கர்வத்தினால் பலி சக்ரவர்த்தி, பானாசுரர், இராவணன், துரியோதனன் ஆகியோர் நாசமானார்கள். வேதங்கள் எண்ணற்றவை. பிரம்மா முதலானவர்களாலேயே வேதங்களை முழுமையாக தெரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேதமே முழுமையாக உங்களுக்கு தெரிந்திருக்க முடியாது. அப்படி இருக்க நான்கு வேதங்களை தெரிந்தவர்களென்று எப்படி கூறுவீர்கள். ஆகையால் இனியாவது பெருமையுடன் பேசவேண்டாம்" என்று கூறினார். சுவாமி சொல்வதை கேளாமல் தம் பேச்சிலேயே மூர்க்கத்தனமாக இருந்தார்கள்.

## அத்தியாயம் 26

கர்வம் பிடித்த பிராமணர்களிடம் ஸ்ரீகுரு "நீங்கள் வீணான பிரமையில் இருக்கிறீர்கள். வேதங்கள் முடிவு இல்லாதவை. வேதங்களை முழுமையாக கற்றவர்கள் யாருமில்லை. முன்பு பரத்வாஜ மகரிஷி வேதத்தை முழுமையாக படிக்க நினைத்து பிரம்மச்சாரியாக மூன்று பிரம்ம நாட்கள் (நான்கு யுகங்கள் ஐந்தாயிரம் முறை கடந்தால் பிரம்மாவிற்கு ஓர் பகல்) ஆசானிடம் வேதத்தை படித்தாலும் முழுமையாக படிக்க முடியாததால் பிரம்மாவை நோக்கி தவம் செய்தார். பிரம்மா அவர் முன் தோன்றி "என்ன வரம் வேண்டுமோ கேள்?" என்றார். 'எனக்கு நான்கு வேதங்கள் முழுமையாக படிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. நீங்கள் கற்று கொடுங்கள்' என்று கேட்டார். அதற்கு பிரம்மா "வேதங்கள் முழுமையாக எனக்கே தெரியாது. அபாரமான வேதராசியை காட்டுவேன் பார்" என்று கூறி கோடி சூரியர்களின் ஒளியுடன் ஒளித்துக் கொண்டு மேருமலைபோல் இருக்கும் வேதராசியை காண்பித்தார். அதைப் பார்த்த பரத்வாஜர் இதுவரை நான் படித்தது இதில் கொஞ்சம் கூட இல்லை. முழுமையாக படிக்க வேண்டுமென்றால் எத்தனை கல்பங்களாகுமென்று நினைத்து "என்னால் எவ்வளவு படிக்க முடியுமோ அதையே எனக்குத் தாருங்கள்" என்று வேண்டினார். அப்பொழுது பிரம்மா அபாரமான வேதராசிலிருந்து மூன்று பிடிகள் கொடுத்து இவை முழுமையாக படிக்கும் வரை நீ வாழ்ந்திருப்பாய்" என்று கூறினார். ஆனால் இதுவரையில் பரத்வாஜருக்கு அந்த கொஞ்சமே படித்து முடிக்க முடியவில்லை. இதைத் தெரிந்து கொண்ட வியாசர் நான்கு வேதங்களை சிறுமையாக்கி ஒவ்வொரு சீடரிடம் இப்படி செல்லலானார். முதலில் பைலனென்ற சீடனை அழைத்து 'ருக்வேதத்தை' கொடுத்து அதை பற்றி விவரித்தார். ருக் வேதத்திற்கு கிளை வேதம் ஆயுர்வேதம். அதன் தேவதை பிரம்மா. அவர் கோத்திரம் 'ஆத்ரேயச' "காயத்ரி சந்தஸ்" சிகப்பு நிறம், தாமரை



இதழ்கள் போன்ற கண்கள், நல்ல கழுத்து, சுற்று முடிகள், இரண்டு முழம் அளவுகொண்ட உடலுடன் இருப்பார். அதில் சர்ச்சை, ஸ்ராவகம், சர்சகம், ஸரவணீயபாரம், க்ரமபாரம், ரதக்ரமம், தண்டக்ரமம் என்ற பாகங்கள் இருக்கின்றன. இதற்கு அஸ்வலாயனீ, ஸாணக்யாயன, ஸாகல, பாங்கல, மாண்டுகேய என்ற பிரிவுகள் இருக்கின்றன என்றார். காலகதியில் ருக்வேதத்தின் நிறைய பாகங்களும், பிரிவுகளும் அழிந்து கொஞ்சம் தான் இருக்கிறது.

வியாசர் இரண்டாவது சீடனான வைசம்பாயனை அழைத்து "யஜுர்" வேதத்தை உபதேசித்து அதைப் பற்றி விவரித்தார். யஜுர் வேதத்திற்கு தனுர்வேதம் கிளை வேதம். ருத்திரன் அதன் தேவதை. "பாரத்வாஜ" கோத்திரம். "த்ரிஷ்டுப்" சந்தஸ்ஸு. தாமரை நிறம், ஐந்து முழம் உயரம், அகலமான கண்கள் கொண்ட உடல். யஜுர் வேதம் யக்ஞங்கள் பற்றி விரிவாக விவரிக்கிறது. ப்ரதிபதம், அனுபதம், சந்தஸ்ஸு, பாஷை, தர்மம், மீமாம்ஸம், நியாயம், தற்கம் என்ற எட்டு கிளை பாகங்கள். சிட்சை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தசு, ஜோதிஷமென்ற ஆறு அங்கங்கள் இருக்கின்றன. இதில் 85 அத்தியாயங்களில் தற்பொழுது பதினெட்டு அத்தியாயங்கள்தான் இருக்கின்றன என்றார்.

மூன்றாம் சீடனான ஜைமினியை அழைத்து "சாம வேதத்தை" உபதேசித்து அதைப் பற்றி விவரித்தார். விஷ்ணு அதன் தேவதை. "ஜகதீ" சந்தஸ்ஸு "காஸ்யபஸ" கோத்திரம். "காந்தர்வவேதம்" கிளை வேதம். நல்ல வெள்ளை நிற துணியை உடலில் சுற்றிக் கொண்டு தண்டத்தை ஏந்தி ஆறு முழ உயரத்துடன் வெண்ணிறம் கொண்டவராக இருப்பார். சாம வேதத்திற்கு ஆயிரம் கிளைகள் இருக்கின்றன. இந்த சாம வேதத்தை முழுமையாக படித்தவர் அந்த நாராயணன் தவிர வேறு யாருமில்லை.

பிறகு நான்காம் சீடனான சுமந்தனை அழைத்து "அதர்வண" வேதத்தை உபதேசித்து அதைப் பற்றி விவரித்தார். "அஸ்திர" வேதம்

இதற்கு உபவேதம். இதன் தேவதை இந்திரன். திரிஷ்டுப் சந்தஸ்ஸு கோத்திரம் "பைஜாநிகம்" தீக்ஷ்னமான ரூபம். கறுப்பு நிறம். ஏழு முழ உயரம். ஒன்பது கிளைகள், ஐந்து கல்பங்கள் உள்ளன. என்றார்.

முன்பு உத்தமரான பிராமணர்கள் தர்ம வழியில் சென்று கொண்டு வேதங்களை படித்துவந்தார்கள். முந்திய காலத்தின் பிராமணர்களிடம் தைவத்துவம், மகத்துவம் இருந்தது. ஆனால் கலியுகத்தில் அவர்கள் தங்களின் தர்மத்தை கைவிட்டு, வேதங்களை படிப்பதினால் தற்பெருமை கொண்டு பணத்திற்கு ஆசைப்பட்டு நம் மதத்தை வெறுக்கும் மன்னர்கள் முன் வேதங்களை சொல்வதினால் அவற்றுக்கு சக்தியும், மகிமையும் இல்லாமல் போயிற்று. முன்பு வேதங்களின் எதிர் ரூபமாக பிராமணர்கள் இருந்து வந்தார்கள். ஆகையால் அவர்கள் "பூசுரர்" என்று போற்றப் பட்டார்கள். மேலும் மன்னர்களும் அவர்களை சேவித்தார்கள். மன்னர்கள் கொடுக்கும் செல்வத்தை மறுத்து, போகங்களை வெறுத்து வந்தார்கள். வேதத்தை கற்றதினால் வந்த மகிமைக்கும், சக்திக்கும் மும்மூர்த்திகளும் அவர்களின் வசம் இருந்தார்கள். இந்திரனோடு எல்லா தேவர்களும் அவர்களை சேவித்தார்கள். அவர்கள் எண்ணினால் புல்லையும் மலையாக்குவார்கள். மலையையும் புல்லாக்குவார்கள். உலகமெல்லாம் தேவதைகளின் ஆதீனமாகும். தேவதைகள் மந்திராதீனம். மந்திரங்கள் பிராமணர்களின் ஆதீனத்தில் இருந்தன. அவர்களை திருமாலும் பூஜித்தார். ஆனால் இப்பொழுது வேதங்களை அவமதிக்கும் அவர்களிடம் பணத்திற்காக, வரட்டு கௌரவத்திற்காக வேதங்களை சொல்லுகிற அளவுக்கு பிராமணர்கள் செயல்படுகிறார்கள். அப்படி பட்டவர்களின் முகத்தையே பார்க்கக்கூடாது. நீங்கள் மதிக்கெட்டு வேதங்களை முழுமையாக படித்தவர்கள் என்று கர்வம் கொண்டு பிராமணர்களை துன்புருத்துகிறீர்கள். இது உங்களுக்கு நல்லதல்ல. இதனால் உங்களுக்கு என்ன லாபம்? அதுவுமில்லாமல் என் சீடன் திரிவிக்ரம பாரதியையும் ஜெயபத்திரம் கொடு என்று துன்புறுத்தி உள்ளீர்கள்.



இப்படி செய்ய உங்களை யார் தூண்டிவிட்டார்கள். இப்படி மதி கெட்ட அகங்காரத்தினால் துன்பங்களை பெறாதீர்கள். இனியாவது நாங்கள் கூறுவதை மதித்து சென்றுவிடுங்கள்" என்று சொன்னார். ஆனால் அந்த மூர்க்கர்கள் தங்களின் பிடிவாதத்தை விடாமல் "உங்களிடமிருந்து ஜெயபத்திரத்தை பெறாமல் சென்றால் எங்கள் மன்னரிடம் அவமானமாகும். ஆகையால் ஜெயபத்திரம் கொடுத்தால் தான் இங்கிருந்து செல்வோமென்று" கூறினார்கள்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 27

அப்பொழுது ஸ்ரீகுரு அவர்களிடம் "நீங்கள் கோரியதை இப்பொழுதே நிறைவேற்றுவேன்" என்று கூறி அந்த வழியாக சென்றுக் கொண்டிருந்த ஒருவனை கூப்பிட்டு "நீ யார்? உன் குலமென்ன?" என்று கேட்டார். அவன் சற்று தொலைவாக நின்று "ஊரின் வெளியே இருக்கும் ஆதி திராவிட குப்பத்தில் வசிக்கிறேன், 'மாதங்கன்' எனது பெயர்" என்று கூறி ஸ்ரீகுருவை கும்பிட்டான்.

ஸ்ரீகுரு ஒரு முறை தனது கருணை பார்வையை அவன் மேல் செலுத்தி தனது தண்டத்தை சீடனிடம் கொடுத்து அவன் முன் ஏழு கோடுகளை போட வைத்தார். பிறகு அவன் மேல் விபூதியை தூவி முதல் கோட்டின் மேல் நிற்கச் சொல்லி நீ யார் என்று கேட்டார். அவன் நான் 'மைந்தன்' என்று சொன்னான். இரண்டாவது கோட்டின் மேல் வந்து கிராதகன் என்றும், மூன்றாவது கோட்டின் மேல் வந்து நதி கரையில் இருக்கும் கங்காபுத்திரன் என பெயர் இருக்கும் காபு குலத்தை சேர்ந்தவன் என்றும், நான்காவது கோட்டின் மேல் வந்து சூத்திரன் என்றும், ஐந்தாவது கோட்டின் மேல் வந்து சோமதத்தன் என்ற வணிகர் என்றும், ஆறாவது கோட்டின் மேல் வந்து கோதாவரி என்ற சத்திரியன் என்றும், ஏழாவது கோட்டின் மேல் வந்து வேதங்களையும், சாத்திரங்களையும் படித்த பிராமண பண்டிதர் என்றும் கூறினான். அப்பொழுது ஸ்ரீகுரு அவனைப் பார்த்து "வேதத்தில் இந்த இரு பிராமணர்களுடன் வாதாடு" என்று கூறினார். அவன் உடனே வேதங்களை கானம் செய்து வாதத்திற்கு தயாரானான்.

அதைப் பார்த்த அந்த இரு பண்டிதர்கள் பயந்து பேச்சடங்கி நடுக்கத்துடன் ஸ்ரீகுருவின் பாதங்கள் மேல் விழுந்து "சுவாமி நீங்கள் மும்மூர்த்திகளின் அவதாரமாகும். ஆக்கல், காத்தல், அழித்தல் செய்யக் கூடியவர்கள். நாங்கள் அகந்தையால் பிராமணர்களை



அவமானித்தோம். எங்களுக்கு கல்வி கற்று தந்த ஆசானனின் கூற்றை மீறி பணத்துக்கும், பொருளுக்கும் ஆசைப்பட்டு வேதங்களை அவமதிக்கும் மன்னர்கள் முன் வேதத்தை சொன்னோம். எங்களை மன்னித்து காப்பாற்றுங்கள்" என்று வேண்டினார்கள். அப்பொழுது ஸ்ரீகுரு "நீங்கள் பிராமணர்களை பராபவித்து வேத தர்மத்தை அவமதித்தீர்கள். இது பெரும் பாவம். ஆகையால் நீங்கள் பிரம்மராட்சசர்களாவீர்கள், ஆனால் நீங்கள் செய்த தவறை உணர்ந்து அதனால் பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மராட்சசர்களாக வாழ்ந்த நேரத்தில் ஒரு பிராமணர் மூலமாக வேதத்திலிருக்கும் "நாராயணவாகத்தை" கேட்பதினால் ராட்சச பிறவியிலிருந்து விடுதலை பெருவீர்கள்" என்று கூறினார். அந்த இருவரும் ஸ்ரீகுருவிடமிருந்து விடைபெற்று கிராமத்தின் எல்லையை கடந்த உடனே மார்புவலி வந்து இறந்து மறுபிறவியில் ராட்சசர்களாக பிறந்து குரு கூறியது போல் நாராயணவாகம் கேட்டு நற்கதி அடைந்தார்கள்.

ஏழு பிறவிகளுக்கும் முன் வேத பண்டிதர் என்ற நினைவு பெற்ற அந்த ஆதி திராவிடர் சுவாமியை வணங்கி "குருதேவா! நீங்கள் மூன்று காலங்களைத் தெரிந்தவர். நான் முன்பு வேதபண்டிதனாய் பிராமணராயிருந்தும் இப்படி ஆதி திராவிடராக ஏன் பிறந்தேன் என்று தயவு கூர்ந்து தெரிவியுங்கள்" என்று வேண்டினான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 28

சித்தமுனி நாமதாரகனிடம் பிறகு என்ன நடந்தது என்று சொல்ல ஆரம்பித்தார். ஸ்ரீகுரு அந்த ஆதித்திராவிடரிடம் "அப்பனே எந்தப் பாவம் செய்தால் என்ன வினைகள் வருமோ கூறுகிறேன் கேள். ஆசாரத்தை கடைபிடிக்காத பிராமணன் தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறப்பான். தாய் தந்தையரை, குருக்களை, குலப்பெண்ணை, குலதேவதையை, சத்தியத்தை, அகிம்சையை விட்டவர்கள், வரதட்சனையை வாங்குபவர்கள், தாய் தந்தையர்களை குழந்தைகளை, பசுக்களை, கன்றுகளை, வேறு செய்பவர்கள் தெய்வத்துக்கு படைக்காமல் ஆகாரம் உட்கொள்ளுபவர்கள், அதிதிகளை சேவிக்காதவர்கள், நற்பிராமணர்களை தூசித்து, அயோக்கியர்களை கௌரவிப்பவர்கள், பிறரின் நிலத்தை எடுத்துக் கொள்பவர்கள், தங்களின் குருக்களையும், எஜமானர்களையும் வெறுக்கும் அவர்கள், நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள், கங்கை ஆகிய தீர்த்தங்களை நிந்தனை செய்பவர்கள், சிரார்த்த கர்மாக்களை செய்யாதவர்கள், வைத்தியம் தெரியாமல் அதை செய்பவர்கள், சுத்தமான வேதமார்க்கத்தை விட்டு மந்திரங்கள் செய்பவர்கள், குருவும் மனிதன் என்று என்னுபவர்கள், ஹரி, ஹரன் வேறு என்று பேத நினைப்புடன் தேவதைகளை தூற்றுபவன், தன் தர்மத்தை விட்டு வேறு தர்மத்தை கடைப்பிடிப்பவன், அருகதை இல்லாதவனிடம் மந்திர உபதேசம் பெறுபவன், இவர்கள் சண்டாளப் பிறவி பெறுவார். குருவையும், குடும்பத்தையும் விட்டவனுக்கு கோரமான வியாதிகள் வரும். பிறரின் ரகசியங்களை, பாவங்களை வெளியில் சொல்பவனுக்கு கடைசிகாலத்தில் மார்பு வியாதி வரும். கர்ப்பத்தை கலைக்கும் பெண் மறு பிறவியில் மலடியாவாள். இல்லையெனில் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் எல்லோரும் இறந்து விடுவார்கள். தர்மசாத்திரங்களை, புராணத்தை கேட்காதவர்களுக்கு மறு பிறவியில் குருடு, செவிடு வரும். தீயவர்களுடன் சினேகிதம் செய்யும் பெண் கழுதையாகப் பிறக்கும்.



பிரம்மஹத்தியத்தால் காசநோய், கள்ள தொடர்புகளால் தொழுநோய், நம்பிக்கை துரோகத்தினால் உணவு வெறுப்பு, அஜீர்ணம் வரும். பிறரின் பணியாட்களின் மனதை மாற்றி தம் சேவைக்கு ஆட்கொள்பவர்கள் சிறைவாசம் பெறுவார்.

புண்ணிய கர்மாக்களை எதிர்ப்பவர்கள், அவர்களின் பேச்சை நம்புபவர்கள், மக்களுக்கு பயன்படும் ஏரிகளை, கிணறுகளை, தோட்டங்களை, சாலைகளை, யக்ஞங்களை உடைப்பவர்கள், தானமளித்து அதை திரும்பிப் பெருபவர்கள், கொடுத்த வாக்கை தவறுபவர்கள், தம்பம் படைத்தவன், பிறரை கொல்பவன், பிறருக்கு வேதனை அளிப்பவன் இறந்த பிறகு யமலோகத்தில் தண்டனை அனுபவித்து சண்டாள யோனிக்களில் பிறப்பார்கள்.

மேலும் கோபம், சூத்திர பெண்ணின் மேல் ஆசை, எருதின் மேல் ஏறுதல், இஞ்சி, இலைகள் முதலிய ரச பொருட்களை, வேதங்களை விற்பது, கடவுளுக்கு படைக்காத பாலை குடிப்பது, தீயவர்களிடம் தானம் பெருவது, பிறரின் வாழ்வாதாரத்தை அபகரிப்பது, சந்தியா (பகலும் இரவும் சந்திக்கும்) காலங்களில் தூங்குவது, பிராமணர்களாயினும் மறு பிறவியில் தாழ்த்தப்பட்ட பிறவி வரும்.

குரு துரோகி, பிராமணரை அவமானித்தவன் பிரம்ம ராட்சசனாக பிறப்பான். விருந்தினரை விட்டு உணவு சாப்பிட்டால் கோழியாக, பணம் திருடுபவன் குரங்காக, தேனை திருடினால் பறவையாக, இறைச்சியை திருடினால் தேளாக பிறப்பான். தங்கத்தை திருடினால் சர்க்கரை நோய் பெறுவான். புல்லை திருடினால் பசுவாக, நண்பனுக்கு துரோகம் செய்தால் கழுகாக பிறப்பார்கள். புத்தகத்தை திருடினால் குருடனாக, பிறரின் சொத்தை திருடினால் பிள்ளை பேறு இல்லாமல், ஆடைகள் திருடினால் தோல் வியாதி பெறுவார்கள். பொய் சொல்பவன், ஆகாரத்தை திருடுபவன் ஆசன வாய் வியாதி பெறுவான். எண்ணெய் திருடினால் சுகவியாதியும் நம்பிக்கை துரோகிக்கு வாந்தி,

தெய்வத்தின் பணத்தை திருடினால் வெண்குஷ்டம் வரும். வீட்டு உபயோக பொருட்களைத் திருடினால் காக்கையாக பிறப்பான். அன்னிய பெண்ணின் யோனியை பார்த்தால் குருடனாக, மூடனாக, சொந்தகாரர்களின் பெண்களுடன் உறவு வைத்துக் கொண்டால் கழுதையாக, தீய எண்ணத்துடன் பெண்ணை பார்ப்பவன் கண் வியாதியுடன் பிறப்பார்கள்." இப்படி குருமூர்த்தி கர்ம விபாகத்தை சொல்ல திரிவிக்ரம பாரதி குருவிடம் "நீங்கள் தர்மத்தை பற்றி விவரமாகக் கூறினீர்கள். ஆனால் மேலே சொன்ன பாவங்களை செய்தவர்களுக்கு அந்த பாவ கர்மாவை போக்க ஏதாவது பரிகாரம் இருக்கிறதா கூறுங்கள்" என்று கேட்டார். "செய்த பாவங்களை நினைத்து வருந்தி திருந்தினால் அவனுடைய பாவம் நீங்குவதற்கு அது முதல் அடி ஆகும். பெரும் பாவங்களை செய்தவர்கள் கர்ம விபாகத்தில் கூறியபடி பரிகாரங்களை செய்து கொள்ளலாம். முதலில் சபையில் அவன் செய்த பாவத்தைச் சொல்லி அவர்கள் கொடுத்த தண்டனையை அனுபவிக்க வேண்டும். தகுந்த க்ருச்சாதி விரதங்களை செய்தால் பாவங்கள் தீர்ந்து விடும். தங்களின் சக்திக்கு ஏற்றபடி கோதானமோ, இல்லை எனில் தகுந்த பணமாகவோ, பொருளாகவோ தானம் செய்ய வேண்டும். தெரியாமல் செய்த பாவங்கள் அனுதாபத்தினால், குருவின் சேவையினால் போய்விடும். பொன் தானத்தினால், தீர்த்த யாத்திரை செய்தாலும் பாவங்கள் போய்விடும். காயத்திரி ஹோமத்தினாலும், வேத பாரயணத்தினாலும் விரதங்கள் செய்த பலன் வரும்.

கிருச்ச விரதமென்றால் முதலில் மூன்று பகலிலும் பிறகு மூன்று இரவுகளிலும் மட்டுமே சாப்பிட வேண்டும். அதன் பிறகு மூன்று தினங்களில் கிடைத்ததை மட்டுமே சாப்பிட வேண்டும். மேலும் பாவங்கள் நீங்குவதற்கு 'சாந்த்ராயன' விரதமும் செய்யலாம். அதாவது அமாவாசை அன்று உண்ணாவிரதமிருந்து மறுநாள் முதல் ஒவ்வொரு நாளும் ஒரு பிடி சோறாக உயர்த்திக் கொண்டு பௌர்ணமி நாளுக்கு பதினைந்து பிடிகள் சோறாக சாப்பிட வேண்டும். பின்வரும்



அமாவாசை வரையில் ஒவ்வொரு பிடியாக குறைத்துக் கொண்டே சென்று அமாவாசை அன்று உண்ணாவிரதம் இருக்க வேண்டும். இந்த விரதத்தினால் எல்லா பாவங்கள் நீங்கிவிடும். காசியில் ஒரு மண்டல காலம் (44 நாட்கள்) இருந்து தினமும் கங்கையில் நீராடி விசுவநாதரை சேவித்தால் செய்த பாவங்கள் தீர்ந்துவிடும். சேது சமுத்திர கரையில் இருக்கும் ராமேசுவரத்தில் நீராடினாலும் பாவங்கள் நீங்கிவிடும். அகமர்ஷன ஸுக்தம், நாராயண உபனிஷத், புருஷ ஸுக்தம் முதலியவை படிப்பதினால் எந்த பாவமும் நீங்கிவிடும். பாவமன்னிப்பு செய்ய விரும்புவோர் முதல் நாள் உண்ணாவிரதமிருந்து பசுவின் மூத்திரம், பால், தயிர், வெண்ணை, நெய் முதலியவை கலந்து தீர்த்தமாக பருகவேண்டும். குருவின் சேவை செய்து அவரது தயவாலும் வேதங்களை கற்று, தன் தர்மத்தையே கடைப்பிடிக்கும் ஓர் நற்பிராமணரின் ஆசியாலும் பாவங்கள் நீங்கிவிடும்" என்று ஸ்ரீகுரு திரிவிக்ரம பாரதியிடம் கூறி ஆதிதிராவிடனை பார்த்து "முற்பிறவியில் நீ அம்மை, அப்பனை விட்டதினால் ஆதிதிராவிடராக பிறந்தாய். ஆகையால் நீ ஒரு மாதம் இந்த சங்கம சேத்திரத்தில் நீராடினால் உன் முற்பிறவியின் பாவங்கள் அகன்று மறு பிறவியில் பிராமணராக பிறப்பாய்" என்றார். அவன் ஸ்ரீகுருவிடம் "சுவாமி உங்கள் கருணை பார்வையினால் என் பாவங்களெல்லாம் போய்விட்டன. பருசவேதி தொட்ட இரும்பு பொன்னாக மாறியதுபோல் உங்கள் பார்வை பட்ட நான் புனிதமாகிவிட்டேன். ஆகையால் என்னை மன்னித்து பிராமணர்களுடன் சேர்த்து வையுங்கள்" என்று வேண்டினான். ஸ்ரீகுரு "நீ ஆதிதிராவிடர் குலத்தில் பிறந்து வளர்ந்ததினால் உன்னை பிராமணராக யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். முன்பு சத்திரியரான விசுவாமித்திரர் பிரம்ம ரிஷியாக நினைத்து வெகுகாலம் தவம் புரிந்து தேவர்களை அணுகி நான் வெகுகாலம் தவம் புரிந்தேன். ஆகையால் என்னை பிரம்மரிஷியாகச் செய்யுங்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் நீங்கள் இந்த உடலை சூரிய கிரணங்களினால்

எரித்துவிட்டு, புது உடல் வரும் வரை தவம் செய்து வாருங்கள். அப்பொழுது நீங்கள் பிரம்மரிஷியாவீர் என்றார்கள். அவர் கூறியது போல் விசுவாமித்திரர் செய்து பிரம்மரிஷியானார். அப்பேர்பட்ட விசுவாமித்திரருக்கே அப்படியென்றால் சாதாரணமான உன்னை எப்படி பிராமணராக ஆக்க முடியும். ஆகையால் நீ முற்பிறவியில் செய்த பாவத்திற்கு பரிகாரம் செய்து மனம் திருந்தி வாழ்ந்தால் அடுத்த பிறவியில் பிராமணராக முடியும்" என்றார்.

ஆனால் ஏழைக்கு புதையல் கிடைத்தால், மரண தருவாயில் இருப்பவனுக்கு அமிர்தம் கிடைத்தால், பட்டினியாக இருந்த பசுவிற்கு புல் கிடைத்தால் அவைகளை விடமுடியாதோ முற்பிறவி ஞானம் பெற்ற ஆதிதிராவிடர் வீட்டிற்கு செல்ல மறுத்து தன்னை பிராமணர்களில் சேர்க்குமாறு விடாப்பிடியாக அங்கேயே இருந்தான். இதற்குள் அவன் மனைவி, பிள்ளைகள் அங்கு வந்து நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள். உங்களை வெகு நேரமாக காணவில்லை. வீட்டிற்கு செல்லலாம் வாருங்கள் என்று அவன் கையை பிடித்துச் செல்ல முற்பட்டார்கள். அதற்கு அவன் அவர்களை விட்டு தொலைவாக சென்று "நான் இப்பொழுது பிராமணன். என்னை தொடாதீர்கள்" என்று கூறினான். அதை கண்ட அவன் மனைவி அவனுக்க பித்து பிடித்தது போலிருக்கிறது என்று வேதனையுடன் குருவைப் பார்த்து "சுவாமி இவருக்கு பைத்தியம் பிடித்தது போலிருக்குது. என்னையும், இந்த குழந்தைகளையும் யார் காப்பாற்றுவார்கள். ஆகையால் இவருக்கு புத்திமதி சொல்லி என்னுடன் அனுப்பி வையுங்கள். அப்படி இல்லை எனில் நான் இங்கே பிள்ளைகளுடன் தற்கொலை செய்து கொள்வேன்" என்று வேதனையுடன் மன்றாடினாள். இதைக் கேட்ட ஸ்ரீகுரு சிரித்து அவனிடம் "நீ உன் வீட்டிற்கு செல். மனைவி, பிள்ளைகளின் துன்பத்தால் உனக்கு நற்கதி கிடைக்காது. இல்லற வாழ்க்கையில் உள்ளவன் தன் தர்மத்தை செய்து இல்லற சுகத்தை அனுபவிக்க வேண்டும். அப்படி செய்தால்தான் சம்சார கடலை தாண்ட முடியும். சூரியன், சந்திரன் சாட்சியாக ஒரு பெண்ணை மணமுடித்து



அவளை கைவிட்டால் அது பெறும் பாவமாகும்" என்று சொல்ல அவன் "சுவாமி உங்கள் கருணையினால் நான் ஞானம் பெற்ற பிறகு மீண்டும் ஆதிதிராவிடனாக எப்படி செல்ல முடியும்" என்று கூறினான். அப்பொழுது சுவாமி, நான் மந்திரித்து அவன் மேல் தூவிய விபூதியினால் இவனுக்கு இந்த விவேகம் வந்தது. அதை அவன் உடலிலிருந்து அகற்றிவிட்டால் தற்செயலாக வந்த விவேகம் போய்விடும் என்று நினைத்து தன் சீடனிடம் பணக்காரரும், பிசினாரியும் ஆன ஒரு பிராமணரை அழைத்து வரச் சொல்லி, ஆதிதிராவிடர் மேலிருக்கும் விபூதியை தண்ணீர் விட்டு அகற்றி விடுமாறு கூறினார். அந்த பிராமணர் ஸ்ரீகுரு சொன்னதைச் செய்தார்.

அப்பொழுது ஆதிதிராவிடர் மேலிருக்கும் விபூதி போனவுடனே அவனுக்க இந்த ஜென்ம நினைவு திரும்பி வந்தது. உடனே அவன் மனைவி மக்களை பார்த்து நான் இங்கே எப்படி வந்தேன். எனக்கு ஏன் மயக்கமாக இருந்தது என்று கூறி அவர்களுடன் வீட்டிற்கு சென்று விட்டான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த திரிவிக்ரம பாரதி ஆச்சரியப்பட்டு ஸ்ரீகுருவிடம் "சுவாமி அவனுக்கு எப்படி திடீரென்று அவ்வளவு விவேகம் வந்தது. தண்ணீர் விட்டு உடலை கழுவிய உடனே வந்த விவேகம் போய்விட்டது" என்று கேட்டார். அதற்கு ஸ்ரீகுரு "நான் மந்திரித்து அவன் மேல் தூவிய விபூதியினால் அவனுக்கு விவேகம் வந்தது. அந்த விபூதி போய்விட்ட உடனே அவன் பெற்ற விவேகம் மறைந்து இப்பிறவியின் நினைவு வந்தது. விபூதி அவ்வளவு மகிமை உடையது. ஆகையால் ஈசுவரன் அதை உடல் முழுவதும் எப்பொழுதும் பூசிக் கொண்டிருப்பார். மேலும் மகான்களின் கைபட்டால் அதற்கு அதிக சக்தி வருகின்றது" என்று சொல்ல, திரிவிக்ரம பாரதி சுவாமியிடம் "விபூதி மகிமையை (விஸ்தாரமாக) முழுமையாக கூறுங்கள் கேட்க ஆவலாக உள்ளது" என்று வேண்டினான்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*



## அத்தியாயம் 29

ஸ்ரீகுரு திரிவிக்ரமபாரதியிடம் விபூதி மகிமையை சொல்லலானார். "முன்பு கிரதயுகத்தில் வாமதேவன் என்ற முனி வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் வீடு, வாசலை விட்டு, கோரிக்கை, கோபம் முதலியவை துறந்து, உடல் முழுவதும் விபூதியை பூசிக் கொண்டு மரபட்டைகளையும் புலித் தோலையும் உடுத்தி புண்ணிய தலங்களை தரிசித்துக் கொண்டு, நதிகளில் நீராடி திரிந்து கொண்டிருந்தார். அப்படி அவர் 'க்ரௌஞ்சாரம்' என்ற காட்டில் செல்கையில் பயங்கரமான ஒரு அரக்கன் அவரைப் பார்த்து கொன்று சாப்பிடவேண்டுமென்ற நோக்கத்துடன் அவரை நெருங்கினான். ஆனால் முனிவரோ அசையாமல் என்ன நடக்க போகுதென்று பார்த்துக் கொண்டு நின்றுவிட்டார். அந்த அரக்கன் வாமதேவரை பிடித்து விட்டான். அந்தச் சமயத்தில் முனிவரின் உடலில் இருக்கும் விபூதி அரக்கனுக்கு ஒட்டிக்கொண்டது. உடனே அரக்கனுக்கு முற்பிறவியின் நினைவு வந்தது. இவ்வுலகில் எதுவும் கிடைக்கும். ஆனால் ஓர் சத்புருஷரின் தரிசனம் கிடைப்பது மிக கடினம். அப்படிப்பட்ட வாமதேவரின் தரிசனமும், உடலின் ஸ்பரிசமும் ஏற்பட்டதனால் அரக்கனிடம் இருக்கும் தீயகுணம் அகன்று சாந்தகுணம் வந்தது. அவன் முனிவரின் பாதங்களில் விழுந்து "மாமுனிவரே உங்கள் தரிசனத்தால் என் பாவங்களெல்லாம் போய்விட்டன. நான் தூயவன் ஆகிவிட்டேன். என்னை காப்பாற்றுங்கள்" என்று வேண்டினான். முனிவர் "நீ யார்? மனிதர்கள் இல்லாத இந்தக் காட்டில் ஏன் இருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன் "உங்களின் தரிசனத்தால் என் 25 முற்பிறவிகளின் நினைவு வந்தது. 25 பிறவிகளுக்கு முந்திய பிறவியில் "துர்ஜனன்" என்ற பெயருடன் 'யவன' ராஜ்ஜியத்தின் அரசனாக இருந்தேன். அப்பொழுது மக்களை மிகவும் துன்புறுத்தி தராதரம் பார்க்காமல் மதம் கொண்டு எண்ணற்ற பெண்களை மணம் கொண்டும், பலாத்காரமாகவும்,



பண ஆசையை காட்டியும், அரசர்களை ஜெயித்து அவர்களின் மனைவிகளையும் கெடுத்துவிட்டேன். என் காம வேட்கைக்கு திருமணமாகாதவர்கள், பதிவிரதைகள், விதவைகள், சிறுமிகள் என்று பல பெண்களை துன்புறுத்தி உடலுறவு கொண்டேன். எல்லாக் குல பெண்களையும் கெடுத்தேன். அப்படிச் செய்த பிறகு அவர்களைப் பற்றி ஏதும் நினைக்காமல் எதிர்த்தவர்களை சிறையில் அடைத்தேன். இப்படி பல பாவங்களைச் செய்ததினால் எனக்கு காசநோய் வந்தது. அந்த நேரத்தில் எதிரிகள் என் நாட்டின் மேல் படையெடுத்து என்னை கொன்று என் அரசை கைப்பற்றினார்கள். அப்பொழுது யமதூதர்கள் என்னை யமலோகத்திற்கு கொண்டு போயி பத்தாயிரம் வருடங்கள் அங்கே பல கொடுமைகளை அனுபவித்த பிறகு பூலோகத்தில் பேயாக திரிந்தேன். அதற்குப் பிறகு புலி, மலைப்பாம்பு, ஓநாய், பன்றி, நாய், நரி, மான், முயல், குரங்கு, கழுகு, தவளை, காக்கை, கோழி, குருட்டுக் கழுதை, பூனை மற்றும் யானையாகப் பிறந்தேன். இந்த இருபத்தைந்தாவது பிறவியில் அரக்கனாக பிறந்து இந்தக் காட்டில் அலைந்துகொண்டிருக்கிறேன். பசியால் உங்களை சாப்பிட நினைத்து உங்கள் மேல் விழுந்தேன். உங்கள் உடலின் ஸ்பரிசம் பட்டவுடனே என்னுள் இருந்த அரக்கத் தன்மை நீங்கி ஞானம் பெற்றேன். உங்களை தொட்டவுடனே ஞானம் பிறந்ததற்கு என்ன காரணமோ தெரியவில்லை. அதைப் பற்றி சற்று கூறுங்கள்" என்று கேட்டான். அப்பொழுது வாமதேவன் 'நீ என்னை தொட்ட சமயத்தில் என் உடலிலிருந்த விபூதி உன் உடலில் தொற்றிக் கொண்டது. அந்த விபூதி மகிமையினால் உனக்கு முற்பிறவி நினைவுகள் வந்து நீ திருந்திவிட்டாய். இந்த விபூதியின் மகிமை எண்ணற்றது. ஆதலால்தான் பரமசிவன் இதை உடல் முழுக்கவும் பூசிக் கொள்கிறார். இந்த விபூதியை பூசுவதினால் புண்ணியம் கிடைத்த ஒருவரின் கதையை கூறுகிறேன் கேள். முன்பு நியதி நெறிகளை துறந்த, ஆசாரங்களை விட்ட ஓர் பிராமணர் இருந்தார். அவர் ஒரு சூத்திர பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததனால் அவனை ஊர்க்காரர் ஊரைவிட்டு வெளியேற்றினார்கள். தாய் தந்தையர்களும்

அவனை துரத்திவிட்டார்கள். ஒரு நாள் அவன் குடித்துவிட்டு தன் காதலியிடம் சென்ற பொழுது அவள் வேறொரு ஆணுடன் உறவு கொண்டாடி கொண்டிருந்தாள். இதைப் பார்த்து கோபத்துடன் அந்த பிராமணர் அங்கிருந்தவனை அடிக்கப் போனான். அந்த சண்டையில் அங்கிருந்தவன் பிராமணரை கொன்றுவிட்டு மயானத்தில் ஒரு பள்ளத்தில் தூக்கி எறிந்தான். பக்கத்தில் எரிந்த சாம்பலில் இருந்த நாய் ஒன்று இவனை சாப்பிட இவன் மேலே வந்து தன் உடலை உதறியது. ஆதலால் நாயின் மேல் இருந்த சாம்பல் பிராமணர் உடல் மேலெல்லாம் விழுந்தது. அவன் உயிர் போய்விடும் தருவாயில் அதைக் கொண்டு செல்ல எமதூதர்கள் அங்கு வந்தார்கள். அதே சமயத்தில் சிவதூதர்களும் அங்கு வந்து 'இவன் உடலில் சாம்பல் இருக்கிறது. அதனால் இவனை நாங்கள் சிவலோகத்திற்கு கொண்டு செல்லவேண்டும். ஆகையால் நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள்' என்று எம தூதர்களை துரத்தி விட்டார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் எம தூதர்கள் எமனிடம் சென்று நடந்ததை கூறினார்கள். உடனே எமன் அங்கு வந்து "இவன் நிறையப் பாவங்கள் செய்திருக்கிறான். கொஞ்சம் கூட புண்ணியம் செய்யவில்லை. இப்படிப்பட்டவனை நீங்கள் எப்படி சிவலோகத்திற்கு கொண்டு போவீர்கள்" என்று கேட்டார். 'யார் யார் உடலில் சாம்பல் பூசி கொள்கிறார்களோ அவருக்கெல்லாம் சிவலோகத்திற்கு வர யோக்கியதை உள்ளவர்கள் என்று பரமசிவன் கூறியுள்ளார். சாம்பலை விபூதியாக உடலில் பூசிக் கொள்கிறார்களோ அவர்களின் பாவங்கள் நீங்கி விடும்' என்று சிவ தூதர்கள் எமனிடம் கூறினார்கள்.

எமன் சிவதூதர்களை வணங்கி, தன் தூதர்களிடம் "இனிமேல் சாம்பலை விபூதியாக பூசிக் கொள்கிறார்களோ அவர்களிடம் நீங்கள் போகாதீர்கள். அவர்கள் சிவலோகத்திற்கு செல்லக் கூடியவர்கள்" என்று கூறி அங்கிருந்து சென்றுவிட்டார்கள். ஆகையால் நான் பரமசிவனுக்கு பிடித்த விபூதியை உடலில் பூசிக் கொள்கிறேன்" என்றார். அதற்கு அந்த அரக்கன் "நான் அரசனாக இருந்த நேரத்தில் செய்த சிறிது புண்ணியத்தால் உங்களை பார்க்க நேர்ந்தது. விபூதி



என்றால் என்ன? அதை எப்படி தயாரிக்க வேண்டும்? எப்படி உடலில் பூசிக் கொள்ள வேண்டும்? தயவு கூர்ந்து சொல்லி என்னை இந்த பாவத்திலிருந்து காப்பாற்றுங்கள்" என்று வேண்டினான்.

முன்பு மந்திராசல மலையில் சிவன் பார்வதி சமேதராய் சபையை கூட்டினார். பிரமதகணங்கள், மூன்று கோடி தேவர்களும். எட்டு திசை ஆளுனர்களும் சிவனை சேவித்து கொண்டிருந்தனர். அந்த சபையில் கந்தர்வரர்கள், கேசர்கள், நாகப்பாம்புகள், பண்டிதர்கள். கிம்புருஷர்கள், சித்தர்கள், சாதுக்கள், வசிஸ்டர், விசுவாமித்திரர், நாரதர், பிரஹஸ்பதி, பித்ரு கணங்கள், ஊர்வசி, ரம்பை, மேனகா, ஏழு மாதர்கள், சந்டிக, மஹாகானர், மஹாநீலர், நந்தீசுவரர், மணிபத்திரர், வீரபத்திரர், பிரிங்கிரிகேடர், பூதநாதர் ஆகியோர்கள் இருந்தார்கள். பரமசிவன் அவர்களின் நடுவில் சிம்மாசனத்தில் கோடி சூரிய பிரகாசத்துடன் ஜடைகள் கொண்டு கபாலத்தை கையில் ஏந்தி, நாகங்களை ஆபரணங்களாக போட்டுக் கொண்டு சந்திரனை, கங்கையை சிரத்தில் ஏந்தி பலவித அலங்காரங்களுடன் ஜொலித்துக் கொண்டிருந்து உமையாளுடன் அமர்ந்திருந்தார். அப்பொழுது சநத்குமாரன் எழுந்து வணங்கி "சுவாமி உலகிலுள்ளவர்கள் தம் பாவங்களை அகற்றிக் கொண்டு, மோட்சத்தை பெறக்கூடிய எளிதான, சுலபமான வழியைக் கூறுங்கள்" என்று வேண்டினான்.

"சுலபமாக மோட்சத்தை தரக்கூடியது விபூதியை மூன்று கோடுகளாக நெற்றியில் இடுவது. அதை எப்படி செய்து நெற்றியில் இட வேண்டும் என கூறுகிறேன். காய்ந்த பசுச் சாணம் எடுத்து அதனுடன் ஹோமம் செய்து அந்த சாம்பலை எடுத்து வேதங்களில் கூறப்பட்ட 'அக்னிரித்யா' என்ற மந்திரத்தை சொல்லி கையில் எடுத்துக் கொண்டு 'மானசோக்த' என்ற மந்திரத்தை சொல்லி அதை நன்றாக நசுக்கி 'த்ரயம்பகம்' என்ற மந்திரத்தை சொல்லி நெற்றியில் இட வேண்டும். முதலில் நடுவிரல், மோதிரவிரலால் கீழும் மேலும் பட்டைகளை தீட்டவேண்டும். பிறகு கட்டை விரலால் நடு பட்டை தீட்ட வேண்டும் இப்படி தீட்டும் பொழுது 'த்ரயாயுஷம் ஜமதக்னே' என்ற மந்திரத்தை

கூற வேண்டும். இந்த மூன்று பட்டைகளும் கண் புருவங்களை தாண்டக்கூடாது. முதல் பட்டையானது அகாரம், கார்ஹபத்திய அக்னி, பூதத்துவம், ரஜோகுணம், ருக்வேதம் எனப்படும். பிரம்மா அதன் தேவதை. இரண்டாவது உகாரம். தட்சண அக்னி, ஆகாச தத்துவம், யஜுர் வேதம், தமோகுணம் எனப்படும். விஷ்ணு அதன் தேவதை. மூன்றாவது மகாரம். அகவதீயாக்னி, வாயு தத்துவம், தமோகுணம், சாமவேதம் எனப்படும். ஈசன் அதன் தேவதை. இப்படி விபூதியை இட்டால் முக்தி கிடைக்கும். ஆகையால் எல்லா இன மக்களும் இதை இட்டுக் கொள்ளலாம். இதனால் எல்லா பாவங்களும் நீங்கி புண்ணியம் கிடைக்கும். விபூதியை இடுவதற்கு மேல் கூறிய விதிகள் தெரியாதவர்கள் பக்தியுடனும் சிரத்தையுடனும் செய்தால் எல்லா பாவங்கள் நீங்கி புண்ணியம் கிடைக்கும். மேலும் புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும். வியாதிகள் நீங்கி, எல்லா செல்வமும் பெற்று, நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து முக்தி அடைந்து புண்ணிய லோகத்தை அடைவார்கள்'' என்று கூறினார் என்று வாமதேவர் அரக்கனிடம் விபூதி மகிமையை சொல்லி சிறிது விபூதி எடுத்து மந்திரித்து அவன் கையிலிட்டார். அரக்கன் அதை தன் நெற்றியில் மூன்று கோடுகளாக இட்டு அதன் மகிமையினால் அரக்க ரூபத்திலிருந்து விடுபட்டு நல்ல தேகத்தை பெற்று சொர்க்கலோகத்திற்கு சென்று விட்டான்.

வாமதேவர் அந்த ஈசனின் அவதாரம். மனித குலத்தை தீய வழிகளில் இருந்து காப்பாற்றி மோட்சத்தை தரக்கூடிய விபூதியின் மகிமையை மக்களுக்கு கூறிக் கொண்டு உலகத்தில் திரிகிறார். முன்பு இதை சூத மகாமுனிவர் சௌனகர் முதலிய மகரிஷிகளுக்கும் கூறினார்கள் என்றார்.

திரிவிக்ரமபாரதி ஸ்ரீகுரு கூறிய விபூதி மகிமையை கேட்டு ஆனந்த பரவசத்துடன் குருவை வணங்கி ஆசிரமத்திற்கு சென்று விட்டார்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*





## அத்தியாயம் 30

நாமதாரகன் சித்தமுனிவரை பார்த்து "அய்யா ஸ்ரீகுருவின் மகிமைகளை உங்களால் கேட்டு நான் பரவசமடைந்தேன். மேலும் என்ன நடந்தது என்று கூறுங்கள் கேட்க ஆவலாக உள்ளது" என்றார்.

"நாமதாரகா குருவின் மகிமைகளை முழுமையாக என்னால் சொல்லமுடியாது. என்னால் முடிந்ததை கூறுகிறேன் கேள் ஸ்ரீகுரு மனித உருவத்திலிருந்தாலும் அவர் மும்மூர்த்திகளின் அவதாரமென்று அவர் லீலைகள் மூலமாக தெரிந்து கொண்டு வெகு தூரத்திலிருந்து மக்கள் வரத் தொடங்கினார்கள். அவரை சேவித்து பிள்ளைகள் இல்லாதவர்கள் பிள்ளைகளையும், ஏழைகள் செல்வத்தையும், வியாதியஸ்தர்கள் ஆரோக்கியத்தையும் பெற்றார்கள். அங்கே நடந்த ஓர் லீலையை சொல்கிறேன் கேள்.

மஹூரம் என்ற பட்டிணத்தில் கோபிநாதன் என்ற செல்வமிக்க பிராமணர் வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்கு எத்தனையோ பிள்ளைகள் பிறந்து இறந்து போனார்கள். அப்பொழுது அந்த தம்பதிகள் நீண்ட ஆயுள் உள்ள பிள்ளை பிறக்க வேண்டுமென்று தத்தாத்ரேயரை ஆராதனை செய்தார்கள். அதன் காரணமாக ஒரு ஆண் குழந்தை பிறந்தான். அவனுக்கு தத்தாத்ரேயர் என்று பெயர் வைத்து அவனுடன் சந்தோஷமாக இருந்தார்கள். அவனுக்கு ஐந்து வயது வந்தவுடன் உபநயனம் செய்தார்கள். பனிரெண்டாவது வயதில் சாவித்திரி என்ற அழகான பெண்ணுடன் திருமணம் செய்தார்கள். புது தம்பதிகள் இருவரும் ரதி மன்மதனை போல் இருந்து இல்வாழ்க்கையில் மிக சந்தோஷமாக, எப்பொழுதும் பிரியாமல் ஒன்றாக இருந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். விதிவசத்தினால் அவனுக்கு 26வது வயதில் காசநோய் வந்து அவதிப்பட்டான். அவனுக்கு எத்தனையோ வைத்தியர்களிடம் வைத்தியம் செய்தாலும் வியாதி குறையவில்லை. நாளடைவில் அவனுக்கு சாப்பாடு சாப்பிட

முடியவில்லை. அவன் மனைவி அவனுக்கு எல்லா பணிவிடைகளை செய்துகொண்டு தன் கணவன் என்ன சாப்பிடுகிறானோ அவளும் அவ்வளவேதான் சாப்பிடலானாள். நாளுக்கு நாள் அவனுடைய வியாதி அதிகரித்துக் கொண்டே இருந்தது. கணவன் சாப்பிடாமல் இருந்ததினால் உடல் நலிந்து கொண்டே போயிற்று. அவளும் கணவன் போல் சாப்பிடாமல் இருந்ததினால் அவள் உடலும் நலிந்து போயிற்று. தாய்தந்தையர்கள், ஊரார் சொன்ன யாகங்கள், ஹோமங்கள், பூஜைகள் அத்தனையும் செய்தும் அவன் வியாதி குணமடையவில்லை. அப்பொழுது அவர்கள் தத்தாத்ரேயரிடம் "சுவாமி உங்களை பூஜித்துப் பெற்ற இந்தச் செல்வம் கூட அழிந்து போகிறது. இது உங்களுக்கு நியாயமா? நாங்கள் செய்த பூஜையெல்லாம் என்னவாயிற்று" என்று மனமுருகி மன்றாடினார்கள். இதைக் கேட்ட தத்தாத்ரேயர் "நீங்கள் என்னைப் பற்றி வேதனைப்படுவதினால் என்ன பலன்? முன் ஜென்மத்தில் உங்களுக்கு எவ்வளவு கடன் பட்டிருக்கிறேனோ அதுவரையில்தான் நான் வாழ முடியும். என் தாய் கொடுத்த பாலின் கடனைக் கூட நான் தீர்க்க வில்லை. உங்களுக்கு வேதனை தருவதற்காகத்தான் நான் பிறந்தேன். பெற்றோர்களுக்கு என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. நான் செய்த பாக்கியம் அவ்வளவுதான்" என்று வேதனைபட்டு மனைவியிடம் "கண்மணியே! எனக்காக வீணாய் நீ துன்பப்படுகிறாய். என் வாழ்வு முடியும் தருவாயில் இருக்கிறது. முற்பிறவியில் நான் உனக்கு எதிரி போலிருக்கிறது. ஆதலால் இப்பிறவியில் உன்னை துன்பப்படுத்தியிருக்கிறேன். நான் இறந்த பிறகு நீ என் வீட்டிலேயே இருந்தால் என் பெற்றோர்கள் உன்னை தன் மகளாக எண்ணி காப்பாற்றுவார்கள். இங்கே இருப்பது விருப்பமில்லை என்றால் உன் பிறந்த வீட்டிற்கு போகலாம். என்னை திருமணம் செய்ததினால் உன் வாழ்க்கை, அழகு, சௌபாக்கியம் எல்லாம் வீணாயிற்று" என்று கூறினான். அதைக் கேட்ட சாவித்திரி "சுவாமி நீங்கள் என்னை விட்டு போவீர்களா? உங்களைத் தவிர



வேறு யார் எனக்கு கதி. கணவன் தான் பெண்ணிற்கு எல்லாம் ஆவார். பெற்றோர் அல்ல. உங்களை விட்டு நான் எங்கும் போகமாட்டேன். இதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை" என்று கூறினாள். இதைக் கேட்ட அந்த வயோதிகப் பெற்றோர்கள் மிக துன்பப்பட்டு அழத் தொடங்கினார்கள். அதைப் பார்த்த சாவித்திரி அவர்களிடம் "நீங்களே இப்படி அழுதால் நான் என்ன செய்வது. எங்களுக்கு ஆறுதல் கூற வேண்டியவர்கள் நீங்கள் தானே? நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் பிள்ளைக்கு ஒன்றுமே ஆகாது. அவர் வியாதியிலிருந்து குணமாகி நன்றாக இருப்பார். கந்தர்வ நகரத்தில் தத்தாத்ரேயர் 'நரசிம்ம சரசுவதி' என்ற அவதாரத்தில் அங்கு இருந்து மகிமைகள் செய்து கொண்டு மக்களுக்கு நன்மைகள் செய்து வருகிறாராம். உங்கள் பிள்ளையை அங்கு கொண்டு சென்று அவரிடம் ஆசி பெற்று இவர் வியாதியை குணப்படுத்தி அழைத்து வருகிறேன். என் நம்பிக்கை வீண் போகாது. என் இந்த வேண்டுகோளை மறுக்காதீர்கள்" என்று வேண்டினாள். எப்படியாவது தங்கள் மகனுக்கு குணமானால் போதும் என்ற நினைப்போடு அதற்கு சம்மதித்தார்கள். அப்பொழுது அவனுக்கு நிறைய மெத்தைகள் போட்டு ஒரு பல்லக்கில் அமர வைத்து, சில வேலை ஆட்களுடன் நிறைய பணத்துடன் புறப்பட்டாள். பெற்றோர்கள் தத்தாத்ரேயரை வணங்கி மருமகளையும் மகனையும் ஆசிர்வதித்து வழி அனுப்பினார்கள்.

அவள் தன் கணவருக்கு வியாதினால் அவதி அதிகமாகாமல் இருக்க பல்லக்கை மெதுவாக கொண்டு செல்லலானாள். அப்படி மூன்று நாட்கள் பயணம் செய்து கந்தர்வ புரத்தின் அருகில் வந்து பல்லாக்கை ஓர் இடத்தில் இறக்கி வைத்து ஸ்ரீகுரு எங்கு இருக்கிறார் என்று கண்டறிய ஊருக்குள் சென்று அங்குள்ளவரை ஸ்ரீகுரு எங்கே இருக்கிறார் என்று கேட்டு அவர் அனுட்டானத்திற்கு சங்கமத்திற்கு சென்றிருக்கிறார் என்று தெரிந்து கொண்டு பல்லக்கிடம் வந்தார். மூன்று நாட்கள் பயணம் செய்ததினால் அவனுடைய வியாதி அதிகமாகி அவன் இறந்து விட்டான். இதைப் பார்த்த சாவித்திரி

அதிர்ச்சியடைந்து மார்பில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள். என் உயிருக்கு இணையான பதியே என் கதி இப்படி ஆயிற்றே. பூஜை செய்வதற்காக கோவிலுக்கு சென்றால் கோவில் இடிந்து விழுந்து இறந்ததுபோல், தாகத்தை தீர்க்க அருவிக்கு சென்றால் அங்கே முதலை விழுங்கியது போல் ஆயிற்றே. ஸ்ரீகுருவே உன் பக்தரான என் கணவனின் உயிரை காப்பாற்ற உங்களிடம் வந்தால் அது வீணாகி அவர் இறந்து விட்டார். அவர் பெற்றோர்களின் கடைசி பார்வையும் இல்லாமல் அவர் இறந்துவிட்டார். அவர்களுக்கு நான் என்ன பதில் கூறுவேன் என்று அழுது கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்த சில பெண்கள் அவளிடம் வந்து அவளை தேற்றி "அம்மா நீ இப்படி அழுது என்ன லாபம். கர்மாவை தப்பிக்க யாரால் முடியும்" என்று பலவிதமாக ஆறுதல் சொன்னார்கள். ஆனாலும் அவளால் துக்கத்தை நிறுத்த முடியாமல் மேலும் இங்கே ஸ்ரீகுரு இருக்கிறார். அவர் என் கணவரின் வியாதியை குணப்படுத்துவார் என்று நினைத்து வந்தோம். இப்பொழுது எனக்கு யார்தான் கதி. என் கணவரை விட்டு என்னால் எப்படி இருக்க முடியும். நான் சிறு வயதிலிருந்து உமா, சங்கரை பூஜித்தேன். திருமணமான பிறகு சுமங்கலியாக இருக்க கௌரி பூஜையை செய்தேன். என் மாங்கல்யம் நீடோடி நிலைக்க யார் சொன்ன விரதங்களை எல்லாம் செய்தேன். நான் செய்த பூஜைகள், விரதங்களெல்லாம் வீணாயிற்றே. அந்தக் கௌரி தேவிக்கு என்மேல் ஏன் இந்த கோபம்? என் மாங்கல்யத்தை பறித்தாளே. நான் செய்த புண்ணியமெல்லாம் என்னவாயிற்று? என் கணவர் எல்லோரை விடவும் மேலானவர். அவர்தான் என் உயிர். என்ன செய்வேன் என்று பலபலவிதமாய் துக்கித்துக் கொண்டிருந்தாள். மேலும் பிணத்தின் மேல் விழுந்து இந்தச் செய்தியை கேட்டவுடனே வயதான உன் பெற்றோர்கள் இறந்து விடுவார்களே. இதனால் நான் மூன்று பேரை கொன்றதுபோல் ஆயிற்றே. நான் இப்பொழுது அவர்களுக்கு என் முகத்தை எப்படி காண்பிப்பேன். ஆகையால் நானும் உங்கள் கூடவே



வந்துவிடுகிறேன் என்று கடும் சோகத்துடன் அழுது கொண்டே இருந்தாள்.

அந்த நேரத்தில் கழுத்தில் ருத்திராட்சைகள், கையில் சூலம், உடல் முழுவதும் விபூதி பூசிக்கொண்ட ஓர் சித்த புருஷர் அங்கு வந்து அவளிடம் இப்படிச் சொல்லலானார்.

"உண்மையாக நீ யார், இவன் யார், எங்கிருந்து வந்தீர்கள். நதி ஓட்டத்தில் எங்கிருந்தோ வந்து சேரும் மரங்களைப் போல் மனிதர்கள் இந்த பூமியில் சேருகிறார்கள். அவை மீண்டும் பிரிவது போல் பிரிந்து விடுகிறார்கள். பறவைகள் பகலெல்லாம் திரிந்து மாலை ஆனவுடனே தன் கூண்டுக்கு போய் சேர்வது போல் நேரம் முடிந்தவுடன் உயிர்கள் எங்கிருந்து வந்ததோ அங்கே போகின்றன. நீர்குமிழ்கள் போல் இந்த உடல்கள் வந்து சிறிது நேரம் இருந்து அழிந்துவிடுகின்றன. பிறப்பவன், இறப்பவன் அவைகளில் எங்கே இருக்கின்றான். மாயையினால் இங்குள்ள உயிர்களை என்னுடையது, என்னைச் சேர்ந்தவர்கள் என்று நினைப்பது ஒரு பிரமை. இதை தெரிந்துகொள்ளாமல் இந்த உடலை பெறுகிறான். கர்மா மற்றும் மூன்று குணங்களால் சுகமும், துக்கமும் ஏற்படுகின்றன. குணங்கள் என்பதை மாயையினால் இருப்பதுபோல் தெரியுமே தவிர உண்மையாக அவை இல்லை. மூன்று குணங்கள் பெற்றது மாயை தவிர ஆத்மா கிடையாது. பிறப்பு, இறப்பு என்ற விகாரங்கள் இல்லாத ஆத்மாவுக்கு மூன்று குணங்களுடன் எந்த சம்பந்தமும் இல்லை. மரணமென்பாயா அது பெரும் ஆயுள் இருக்கும் தேவர்கள் கூட கல்பம் முடிவில் அழிந்து போக கூடியவர்களே. இனி மனிதர்கள் காலத்தினால் பிறந்து கர்மாவால் பினிந்த இந்த உடல் எப்படி நிலையாய் இருக்க முடியும். மரணமென்பது பிறந்த நாள் முதலே நிழலைப் போல் உயிரினங்களை தொடர்ந்தே இருக்கும். அவையின் கர்மாவுக்கேற்ப இவ்வுலகத்தின் கடனை முடித்தவுடனே இறந்துவிடும். காலத்திற்கும், கர்மாவுக்கும், முக்குணங்களுக்கும் உட்பட்ட இந்த பூத உடல் பிறந்ததற்கு சந்தோஷமடைவதும், இறந்ததற்கு அழுவதும்

உகந்ததல்ல. பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவிலிருக்கும் காலத்தில் அவனவன் கர்மாவுக்கேற்ப சுகத்தையும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டுமே தவிர அதை மாற்ற யாராலும் முடியாது. சில பரிகாரங்களால் செய்த கர்மாவின் தவிப்பை குறைக்க முடியுமே தவிர காலத்தின் கோலத்தை நிறுத்த முடியாது. உங்களின் இந்த உறவு உண்மை என்றால் முற்பிறவியில் உனக்கு யாரோடு என்ன உறவு, வரும் பிறவியில் யாரோடு என்ன உறவு சொல்ல முடியுமா? இதைத் தெரிந்துகொள்ளாமல் வீணாக நீ வேதனைப்படுவது ஏன்? இப்படி அழியக்கூடிய இந்தத் தோல் பொம்மைகளுக்காகவா நீ வேதனைபடுகிறாய். ஆதலால் இனியாவது உன் சோகத்தை கட்டுப்படுத்தி பிறப்பு, இறப்பு என்ற இந்த சுழலிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி செய்" என்றார். அதைக் கேட்ட சாவித்திரி தன்னை தேற்றிக் கொண்டு "அய்யா எனக்கு இந்த சுழலிலிருந்து மீள்வதற்கு தக்க மார்க்கத்தை தெரிவியுங்கள். நீங்கள் கூறியபடியே செய்கிறேன் என்று வேண்டினாள்.

*அவதூத சிந்தன ஸ்ரீகுருதேவதத்த!*







## அத்தியாயம் 31

அப்பொழுது சித்தபுருஷர் பதிவிரதையான சாவித்திரியிடம் பெண்கள் பின்பற்ற வேண்டிய தர்மங்களைப் பற்றி சொல்ல ஆரம்பித்தார். "முன்பு காசியில் அகத்திய முனிவர் அவர் மனைவி பதிவிரதை லோபமுத்திரையுடன் வாழ்ந்து கொண்டிருந்தார். அங்கே இருந்த விந்திய மலை அகத்தியருக்குப் பணிந்து அவர் சீடரைப் போல் இருந்தது.

ஒருநாள் நாரதர் விந்திய மலையிடம் வந்து நீ எல்லா விதத்திலும் மேலானவர். ஆனால் உயரத்தில் மேருமலையைவிட குறைவானவர் என்று சொன்னார். அதைக் கேட்ட விந்திய மலை ஆத்திரம் கொண்டு மேருமலையைவிட உயரமாக வேண்டுமென்று நினைத்து தன் உயரத்தைப் பெறுக்கிக் கொண்டே போயிற்று. ஆதலால் விந்திய மலைக்குத் தெற்கு புறமிருக்கும் இடமெல்லாம் கதிரவன் ஒளி படாமல் இருட்டாக ஆயிற்று. இதனால் அங்கு வாழ்கிற மக்களின் அன்றாட வேலைகள் முடங்கிவிட்டன. இதைப் பார்த்த முனிவர்கள் தேவர்களின் அதிபரான இந்திரனிடம் சென்று இந்த அவலத்தைப் பற்றி முறையிட்டார்கள். இந்திரன் தன்னால் எதுவுமே செய்யமுடியாதென்று கூறி அவர்களுடன் பிரம்மாவிடம் சென்று நடந்ததைக் கூறி இந்த ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுங்களென்று வேண்டினார்கள். அப்பொழுது பிரம்மா யோசித்து காசியிலிருக்கும் அகத்திய முனிவரிடம் சென்று தெற்குத் திசையில் வாழும் மக்களுக்கு நன்னெறியை கூற யாருமில்லை. நீங்கள் அங்கு சென்று வசிக்க வேண்டுமென்று வேண்டுங்கள். ஆதலால் அவர் தெற்குத் திசைக்கு வருவதால் விந்திய மலை பணிந்து தன் உயரத்தை குறைத்துக் கொள்ளும் என்று கூறினார்.

அதைக் கேட்டு தேவர்களெல்லாம் அகத்திய முனிவரிடம் சென்று அந்த தம்பதிகளை வணங்கி பூஜை செய்தார்கள். அப்பொழுது பிரஹஸ்பதி அகத்தியரையும் அவர் மனைவியான